Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள்: 06 ... ல ரூபா ...-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY ● மக்கள் தினசரி ●

நாதம் 01 பிரமோதூத ஹு வைகாசி மீ 16 ஆம் உ புதன்கிழமை (30 - 05 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹ 05 ஓசை 101

## மீன் பிடிக்க வீசிய வலையில் சிக்கிய ஆயுதப் பொதி!

(அம்பாறை மாவட்ட நிருபர்)

மட்டக்களப்பு வாவி கிட்டங்கித் துறையில் வலை வீசி மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவர் வலையை இழுத்தபோது சிறிது பாரம் அதிகமாக இருக்கவே ஏதோ பெரிய மீன் ஒன்று அகப்பட்டுவிட்ட சந்தோசத்தில் வலையை வலித்திழுத்தெடுத்தார். வலையில் மீனுக்குப் பதிலாக ஒரு பொதி கிடைத்தது. பொதியைச் சந்தோஷத்துடனும் சந்தேகத்துடனும் பிரித்துப் பார்த்தபோது ஒரு ஏ. கே. 47 துப்பாக்கி, ஒரு பிஸ்ரல் நான்கைந்து மகஸின், ஒரு சயனைட் குப்பி ஆகியன பொதிக்குள் இருந்தன. இப் பொருட்கள் பின்னர் சேனைக்குடியிருப்பு விடுதலைப் புலிகள் பொறுப்பாளர்கள் முத்தாலிப்பும், ராஜ்குமாரும் பொறுப்பேற்றுக் கொண்டனர். தாக்குதல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பிரேமா - புலிகள் மீண்டும் சந்திப்பு

## இரு தினங்களில் முக்கிய விஷயங்கள் பற்றி பேச்சு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையின் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் இடையில் இன்னும் ஓரிரு தினங்களில் உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இலங்கை ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்ளவுள்ளார்கள் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்றுப் பத்திரிகையாளருக்குத் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இப் பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா. செயலாளர் யோகரெட்ணம் யோகி உட்பட தானும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்,

இப் பேச்சு வார்த்தையில் அரசு தரப்பில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உட்பட நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் பங்கு பற்றுவார்கள் எனவும் தெரிவித்தார்.

அதே வேளை இப் பேச்சு வார்த்தையின்போது ஆறாவது சட்டத் திருத்தத்தை உடனடியாக நீக்குதல் சம்பந்தமாக அரசு பிரேரணை கொண்டு வருதல் தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் தற்கொலை

(முல்லைத்தீவு)

குமிழமுனையைச் சேர்ந்த இளம் குடும்பப் பெண் கடந்த வெள்ளிக்கிழமை கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

திருமதி கலாநாதன் என்னும் 24 வயது இளம் பெண்ணே குடும்பத் தகராறு காரணமாக விஷம் அருந்தி மரணமானார்.

அண்மையில் இப் பிரதேசத்தில் நடந்த இரண்டாவது தற்கொலை இதுவாகும். (58)

## தேர்தலுக்கு ரெலோ ஆதரவு

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் சுதந்திரமான ஒரு தேர்தலை நடத்துவதாக அரசாங்கம் எடுத்த முடிவைத் தாம் மனப்பூர்வமாக ஆதரிப்பதாக கொழும்பில் ரெலோ, பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

## கொழும்பில் தமிழர் வீடுகளை பொலிஸார் திடீர் சோதனை

(கொழும்பு)

ஹெந்தலை, வத்தளை, நிகம்பு ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களது வீடுகள் திடீரென பொலிஸாரால் சோதனையிடப்பட்டன எல். ரி. ரி. ஈ இயக்கத்தினர் ஆயுதங்களைக் கொண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

# மகளிர்முன்னணி மகாநாடு முடிவு!

## 6வது திருத்த நீக்கம்; மாகாண சபை கலைப்பு; கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்படுவதுடன் ஆறாவது திருத்தச்சட்டமும் விரைவில் நீக்கப்படல் வேண்டும் இவ்வாறு நேற்று யாழ். வின்ஸர் திரையரங்கில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவின் இறுதிநாள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டிற்கு விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியின் பிரதிச் செயலாளரும் மகளிர்முன்னணிச் செயலாளருமான சுந்தரி தலைமை தாங்கினார். இறுதிநாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

1. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.
2. தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகப்பூமியின் பூகோளத் தன்மையும், ஒருமைப்பாடும் பேணப்படல் வேண்டும்.
3. தமிழீழப் பெண்களுக்கெதிரான சகல ஒடுக்குமுறை வடிவங்களும் நீக்கப்பட வேண்டும்.
4. தொழிற்றுறையிலும், கல்வித்துறையிலும் பெண்களுக்கெதிரான பாரபட்சம், சமத்துவமின்மை என்பன நீக்கப்படல் வேண்டும்.
5. சீதனம் வாங்கும் முறை ஒழிக்கப்பட வேண்டும்.
6. பொருளாதார நிலையிலிருந்து பெண்கள் விடுதலை பெறவேண்டும்.
7.. தமிழீழ தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் உடனடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## கனடா சென்றவர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கனடா சென்ற தமிழ் ஆசிரியை ஒருவர் சிங்கப்பூர் விமான நிலையத்தில் வைத்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

சென்ற இவரது பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களை சிங்கப்பூர் அதிகாரிகள் பரிசீலனை செய்த பின்னர் இவரைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

மூன்றரை லட்சம் ரூபா ...

## வட-கிழக்கு மாகாணசபை பணிப்புரைகள் அம்பாறை மாவட்ட...

## எதிர்க்கட்சி ஆதரவை திரட்ட ஹமீத் முயற்சி

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைத் திரட்டப் போவதாக நிதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் தெரிவிக்கி...

...டன் ஆறாவது திருத்... நீக்கவேண்டும். இது நிறை... வேற்றப்படாவிட்டால் விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்ள முடியாமல் போய் ...

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இப் பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திர ராசா. செயலாளர் யோக ரெட்ணம் யோகி உட்பட தானும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இப் பேச்சு வார்த்தையில் அரசு தரப்பில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா உட்பட நீதி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத், இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் பங்கு பற்றுவார்கள் எனவும் தெரிவித்தார்.

அதே வேளை இப் பேச்சு வார்த்தையின்போது ஆறாவது சட்டத் திருத்தத்தை உடனடியாக நீக்குதல் சம்பந்தமாக அரசு பிரேரணை கொண்டு வருதல் தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் வீடுகளை பொலிஸார் திடீர் சோதனை

(கொழும்பு)

ஹெந்தலை, வத்தளை, நிகம்பு ஆகிய பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்களது வீடுகள் திடீரென பொலிஸாரால் சோதனையிடப்பட்டன. எல். ரி. ரி. ஈ இயக்கத்தினர் ஆயுதங்களைக் கொண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

மகளிர்முன்னணிச் செயலாளருமான சுந்தரி தலைமை தாங்கினார். இறுதிநாள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு

1. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்.

2. தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகப்பூமியின் பூகோளத் தன்மையும், ஒருமைப்பாடும் பேணப்படல் வேண்டும்.

3. தமிழீழப் பெண்களுக்கெதிரான சகல ஒடுக்குமுறை வடிவங்களும் நீக்கப்பட கெதிரான பாரபட்சம், சமத்துவமின்மை என்பன நீக்கப்படல் வேண்டும்.

5. சீதனம் வாங்கும் முறை பெறவேண்டும்.

7. தமிழீழ தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் உடனடி

(6ஆம் பக்கம் பார்க்க)

# கனடா சென்றவர் திருப்பி அனுப்பப்பட்டார்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கனடா சென்ற தமிழ் ஆசிரியர் ஒருவர் சிங்கப்பூர் விமான நிலையத்தில் வைத்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

கடந்த 19 ஆம் திகதி சென்ற இவரது பாஸ்போர்ட் மற்றும் ஆவணங்களை சிங்கப்பூர் அதிகாரிகள் பரிசீலனை செய்த பின்னர் இவரைத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

மூன்றரை லட்சம் ரூபா செலவில் இவர் ஏஜென்ட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பதின்நான்கு நாட்களுக்குள் மின்சார இணைப்பு

(அட்டாளைச்சேனை)

உள்ளூராட்சி சபைகளிடமிருந்து மின் விநியோகத்தை மின்சாரசபை பொறுப்பேற்ற பின்னர் மின்னிணைப்புக்குப் பணம் செலுத்தி 14 நாட்களுக்குள் அது வழங்கப்படும் என மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சு அறிவித்து வருகிறது.

இது குறித்து பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி மூலமாகவும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

ஆனால் பொத்துவில் சம்பாந்துறை ஆகிய பகுதிகளில் சுமார் முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் இவ்வாறு மின்சாரம் பெறுவதற்காகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# காசோலை மோசடி; சட்டத்தரணி மீது புகார்

ஒன்றரை இலட்சம் ரூபா காசோலை மோசடி செய்ததாக ஒரு சட்டத்தரணி மீது பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிவான் அந்த சட்டத்தரணியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸாருக்குப் பிடியாணை பிறப்பித்தார்.

இந்தச் சட்டத்தரணி வெல்லம்பிட்டியில் உள்ளவர்த்தகர் ஒருவரிடம் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான போலிக் காசோலையைக் கொடுத்து ஏமாற்றியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆயுதம் தாங்கியோரால்

# நெல் மூட்டைகள் அபகரிப்பு புலிகளால் மீட்பு

(அட்டாளைச்சேனை)

பொத்துவிலில் இருந்து கல்முனை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி அறுபதாம் கட்டை என்ற இடத்தில் ஆயுதம் தாங்கிய சிலரால் மறிக்கப்பட்டு அதிலிருந்த நெல் மூடைகளும் அபகரிக்கப்பட்டன.

லொறிச் சாரதி இச் சம்பவம் குறித்து சம்பவம் நடந்த இடத்துக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகளிடம் புகார் செய்தார்.

இதனையடுத்து அப் பகுதிக்கு விரைந்து விடுதலைப் புலிகள் தேடுதல் மேற்கொண்டனர். அச் சமயம் நான்கு சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்

(6ஆம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கு மாகாணசபை

# பணிப்புரைகள் அம்பாறை மாவட்ட கல்விப்பணிப்பாளர் புறக்கணிப்பு

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணசபையின் செயல்பாடுகள், பணிப்புரைகள் அம்பாறை மாவட்ட கல்விப் பணிப்பாளர் புறக்கணித்து வருகிறார் என தகவல்கள் மூலம் தெரிய வருகிறது,

திருமலையில் நடைபெறும் மாகாண கல்வி அமைச்சு பணிப்பாளர்கள் மகாநாடுகளில் கூட இவர் கலந்து கொள்வதில்லையாம்.

பாதுகாப்புக் கருதி திருமலை செல்வதில்லை என காரணம் கூறும் இவர் மத்திய அரசின் அலுவல்களையே நாடி வருகிறார்.

தனது நிர்வாகத்தின் கீழ் சிங்களவருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தமிழ் - முஸ்லிம் ஊழியர்களை மத்திய அரசின் உதவியுடன் பிற மாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்து வருவதோடு சிங்களவர்கள் மூலம் அவ்வெற்றிடம் நிரப்புவதாக தகவல்கள் கூறுகின்றன. (37)

# பாடசாலைப் பாத்திரங்கள் அதிபர், ஆசிரியர் வீடுகளில்

(யாழ்ப்பாணம்)

மதிய உணவுக்காக பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாத்திரங்கள், வாளிகள், கரண்டிகள் போன்ற பல பொருட்கள் சில அதிபர்களினதும் ஆசிரியர்களின் வீடுகளுக்கும் சென்றுள்ளதாக கல்வித்திணைக்கள உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தற்போது பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டம் கைவிடப்பட்டுள்ளதால் இவற்றை இவர்கள் கொண்டு சென்றுள்ளனர்.

இப்பொருட்களை பழைய மாணவர்சங்கம், பெற்றோர் ஆசிரிய சங்கம் லயன்ஸ், லியோ கழகங்கள் போன்றனவே மதிய உணவுத் திட்டத்துக்காக பாடசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தன இதுகுறித்து சிலபாடசாலை அதிபர்களிடம் கேட்டால் அவை பற்றித் தமக்குத் தெரியாது என்கிறார்கள் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (மு)

# நிவாரணத் துஷ்பிரயோகம்; அதிகாரிகள் மீது நடவடிக்கை

(கொழும்பு)

வறியவர்களுக்கான நிவாரணப் பணமோ அல்லது நட்டஈட்டு பணமோ துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என புனர் வாழ்வு நிர்மாணத்துறை சமூக நல அமைச்சர் ஏ. எஸ். அதிகாரி எச்சரித்துள்ளார்.

இந்த அதிகாரிகள் எந்தப் பதவியில் இருந்தும் இவ்வாறு செய்வது கண்டுபிடிக்கப்பட்டாலும் அவர்மீது இந்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

காலியில் நேற்று நடைபெற்ற தென்மாகாண புனர் வாழ்வு சம்பந்தமான மாநாட்டில் அமைச்சர் கலந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

# சென்றிகள் அமைப்பதால் பீதி கொள்ள வேண்டாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்காணிப்பு மையங்கள், சென்றிகள் அமைக்கப்படுவது குறித்து மக்கள் பீதி கொள்ளத்தேவையில்லை.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் திரு. கரிகாலன் இதனைத் தெரிவித்தார்.

அரசின் சில நம்பிக்கையற்ற நடைமுறைகளினால் நாம் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

இதனால் நாம் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்த வேண்டியுள்ளது என்றார். (37)

# ஆறாவது சட்டத்தைத் திருத்த ஈரோஸ் மசோதா

(கொழும்பு)

யாப்பில் ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்குவது தொடர்பான மசோதா ஒன்றை ஈழவர் ஜனநாயக முன்னணி எதிர்வரும் ஜூன் 12 - ஆம் திகதி பாராளுமன்றச் செயலாளரிடம் சமர்ப்பிக்க உள்ளதாக பாராளுமன்ற அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ஈரோஸின் அரசியல் பிரிவான ஈழவர் ஜனநாயக முன்னணி இதை ஒரு தனி அங்கத்தினர் மசோதாவாக கொண்டு வரவுள்ளது.

# இறக்குமதி செய்யப்பட்ட அரிசி விலைரூபா1.50ஆல்குறைப்பு

(யாழ்ப்பாணம்)

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி வகைகளின் விலை நேற்றிலிருந்து ஒருரூபா ஐம்பது சதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது எனயாழ். செயலக உணவுக்கட்டுபாட்டுக் கிளையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சி ஆதரவை திரட்ட ஹமீத் முயற்சி

(கொழும்பு)

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைத் திரட்டப் போவதாக நிதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எல். ஹமீத் தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் ஆறாவது திருத்... நீக்கவேண்டும். இது நிறை... வேற்றப்படாவிட்டால் விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்தில் சேர்த்துக் கொள்ள முடியாமல் போய் விடுமென்றும் ஜனாப் ஹமீத் ராய்ட்டர் நிருபருக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார்.

# ஒன்றரைவருடகாலபகைமை வாள் வெட்டில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

ஒன்றரை வருட காலமாக அயல் வீட்டுடன் இருந்து வந்த பகைமை முற்றியதில் வாள் வெட்டுக்கு இரையான இருவர் நேற்று யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த வல்லிபுரம் சிவரட்ணம் (40), வல்லிபுரம் மகேந்திரட்ணம்(25) என்ற இரு சகோதரர்களுக்கும் அயல்வீட்டுடன் இருந்து வந்த நீண்ட காலப் பகை முற்றியதில் அயல் வீட்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண சபையின் வெற்றி நிதிக்கு வழிவகுக்கும்

(கொழும்பு)

மாகாணசபைமுறை வெற்றியளிக்குமானால் அதற்கு நிதியுதவி தர பல வெளிநாடுகளும், நிதி நிறுவனங்களும் முன்வந்துள்ளன எனமாகாண சபை, வெளிவிவகாரராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவி மூலம் மக்களுக்கு நன்மைதரும் திட்டங்கள் மாகாண சபை மூலம் செயற்படுத்தப்படவுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

# யாழ். மாவட்ட புனர்வாழ்வு நிதி அரச அதிபர்ஊடாகவிநியோகம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதத்தில் இருந்து சகல புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளிற்கும் ஒதுக்கப்படும் நிதி யாழ். அரசாங்க அதிபரினூடாகவே வழங்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையினால் சகல திணைக்களங்களும் ஒன்றிணைந்து செயற்றிட்டங்களைமேற் கொள்ள இலகுவாயிருக்கும் எனயாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

இதுவரை மேற் கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களிற்குரிய நிதி அவ்வத் திணைக்களங்களிற்கு நேரடியாகவே வழங்கப்பட்டு வந்தன. இதனால் ஏற்பட்ட சிக்கல்கள் இனி தீருமென எதிர்பார்க்கப்படுகிறது. (மு)

# ரயில்வே பகுதிக்கு 200கோடி கடந்த வருடம் நட்டம்

ரயில்வே திணைக்களத்துக்கு சென்ற வருடம் இரு நூறு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது.

நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டு வன்முறைகளினாலேயே இந்த நட்டம் ஏற்பட்டதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐம்பது ரயில் நிலையங்கள் முப்பத்தெட்டு பாலங்கள் எட்டு ரயில்கள் என்பன ஜே வி. பியினரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த வருடம் ரயில் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்ததால் வருமானமும் வீழ்ச்சியடைந்தது.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள், சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலையவீதி. பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்.
(B/1002)

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட CD 50, HONDA CHALY, YAMAHA MATE 50 விற்பனைக்கு உண்டு. Our Lady Store. Hospital Road, Jaffna.
(R.311)

தேவை

மோட்டார் சைக்கிள் விற்கும் கடைக்கு ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்த பெண்பிள்ளை தேவை. தொடர்பு கொள்ளவும். 601, Hospital Road. Jaffna. (R.311)


# வாழைத்தண்டில் இருந்து கைப்பணிப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

வாழைத்தண்டிலிருந்து பிரித்தெடுத்த நாரில் இருந்து தொப்பிகள் கைப்பைகள் போன்ற கைப்பணிப் பொருட்களை தயாரிக்கும் விதம் பற்றி கேரளத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் நீர்வேலியில் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன

இதற்கு நீர்வேலிப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துப்பேரை கொண்ட ஒரு குழுவுக்கு முதற்கட்டமாக பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட உள்ளது இதற்கான ஆரம்பக் கூட்டம் நீர்வேலி வாழைக்குலை உற்பத்தி விற்பனையாளர் சங்க மண்டபத்தில் நடைபெறும்.

பயிற்சி வகுப்புகளின் பின் பயிற்சி அழிக்கப்பட்ட பத்துப் பேராலும் உற்பத்தி செய்யப்படும் கைப்பணிப் பொருட்கள் லக்சல பனைப் பொருள் அபிவிருத்தி விற்பனை நிலையம் ஆகிய வற்றின் மூலம் சந்தைப் படுத்தப்படும். (லோ)

# சிறு உற்பத்தியாளர்களுக்கு கைத்தொழில் திணை உதவி

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்ட ரீதியில் கைப்பணி, கைத்தொழில் அல்லது சிறு உற்பத்தி தொழில்கள் போன்றவற்றில் ஈடுபட்டு வரும் உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமக்கு தேவையான ஆலோசனைகள், அவர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வங்கிக் கடன்கள். இவ்வுற்பத்தியாளர்கள் தமது உற்பத்தி ஸ்தாபனங்களை திட்டமிட்ட ரீதியில் நடத்துவதற்கான ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்கு சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளதென கைத்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி விபரங்களைப் பெற விரும்பும் கைத்தொழில் உற்பத்தியாளர் உடன்தொடர்பு கொள்ளுமாறு அவ்வதிகாரி கேட்டுக்கொண்டார். (லோ)

# மகளிர் உயர் பாடசாலைக்கு மனையியல் கூடம் இல்லை

(நிந்தவூர்)

நிந்தவூர்அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் மனையியல் பாடம் கற்பிப்பதற்கென, மனையியல் கூடத்துடன் கூடிய மனையியல் பிரிவு ஒன்று இல்லாத குறையால் பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டுவருகின்றன.

நிந்தவூரிலுள்ள மகளிருக்கான இந்த உயர்தரப் பாடசாலையில் ஜீ சீ. ஈ. உயர் தர வகுப்பு வரை மனையியல் பாடம் கற்பிக்கப் பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இங்கு மனையியல் கூட வசதியோ, உபகரணப் பிரிவோ இன்மையால செய்முறைக் கற்பித்தலின்போது ஆசிரியைகள் பெருந் திண்டாட்ட நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனினும் இத்தகைய வசதியீனங்களுக்கு மத்தியிலும் அதிபர் ஜனாபா எம் செயினுலாப்தீனின் வழிகாட்டுதலில் ஆசிரியைகள் எடுத்து வரும் பகீரத முயற்சியின் காரணமாக இப் பாடசாலை மாணவிகள் ஜீ சீ. ஈ. சாதாரண தரம், ஜீ சீ.ஈ.உயர்தரம் பரீட்சைகளில், (மனையியல் பாடத்தில்) சிறந்தசித்திகளை கடந்த காலங்களில் பெற்று வந்துள்ளனரென்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மனையியல் பிரிவு (யூனிற்) ஒன்று இப் பாடசாலையில் இல்லாத குறை தொடர்பாக, வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் திட்டமிடல்பணிப்பாளர் திரு. சீ.நடராசாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கடந்தவாரம் மேற்படி பாடசாலைக்கு பணிப்பாளர் திரு.நடராசா வருகைதந்த போது, பாடசாலை அதிபர் ஜனாபா எம்.செயினுலாப்தீன் அவரது கவனத்திற்குக்இதனை கொண்டு வந்தார்.

விரைவில் இக் குறையைத் தீர்க்கத் தாம் ஆவன செய்வதாகத் திரு. நடராசா உறுதி அளித்தார். (53)

# மின்மானி கையாடல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாநகரசபை மின்சார பகுதியினரின் திடீர் நடவடிக்கையால் திருட்டுத்தனமாகமின்மானி கையாடப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனுடன் தொடர்புடைய பாவனையாளருக்கு இரண்டாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டது.

# நெடுந்தீவில் மரநடுகைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் மரநடுகையை ஊக்குவிக்கும் பொருட்டு நெடுந்தீவு விவசாய அபிவிருத்தி சங்கமும் பனை அபிவிருத்தி சங்கமும் இணைந்து நெடுந்தீவுப்பகுதியில் மரநடுகைப் போட்டியொன்றை செயற்படுத்தவுள்ளது.

ஆகக்கூடுதலான தென்னை, பனைமரங்களை உண்டாக்குபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். தேவையான தென்னம்பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். பனைவிதைகளை போட்டியாளர்களே சேகரித்துக் கொள்ளவேண்டும்

இம் மரநடுகைத் திட்டத்திற்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கமும் உதவி வழங்கும்.

போட்டி பற்றிய மேலதிக விபரங்கள் பெறவிரும்புவோரும், தென்னம்பிள்ளைகள் பெறவிரும்புவோரும்யாழ் செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரதிநிதி திரு. வி.கணபதிப்பிள்ளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (மு)

# சொக்கன் மணிவிழா

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் சொக்கனின் மணிவிழா எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் சொக்கனின் ஆக்கங்களின் கண் காட்சியுடன் அவரின் மாருதப் பிரவல்லி நூல் வெளியீட்டு விழாவும் இடம் பெறும்.

விழாவில் சொக்கன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

# நிசாந்தனின் மறைவுக்கு அச்சுவேலியில் மக்கள் அஞ்சலி

(அச்சுவேலி)

''தமிழ் இனத்தின் விடுதலையையும் தமிழர் தாயகத்தின் மீட்சியையும் குறிக்கோளாகக் கொண்டு தன்னையே தமிழ் மண்ணுக்கு அர்ப்பணித்த தம்பி நிசாந்தனின் எண்ணம் நிச்சயம் நிறைவேறும். அவனது குறிக்கோள் நிறைவேற உழைப்பதே அவனது ஆத்ம சாந்திக்காக நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலி''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி அரசியல் பொறுப்பாளர் திரு. நடேசு கூறினார்.

சுகயீனம் காரணமாக மரணமடைந்த தியாக வேங்கை வில்வரெட்ணம் ஜெயரத்தினம் (நிசாந்தன்-குடல்) அவர்களின் ஈமக்கிரியைகள் அவரது சொந்த ஊரான அச்சுவேலி கதிரிப்பாயில் ஞாயிறு மாலை நடைபெற்றது.

கதிரிப்பாய் குடும்ப மயானத்தில் நடைபெற்ற ஈமக்கிரியையின் போது வலிகாமம் அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திரு. நடேசு அவர்கள் தொடர்ந்து உரையாற்றும் போது.

கடந்த 40 வருட காலத்தில் தமிழ் இனம் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிககும் இரண்டு வருடங்களாக இந்திய வல்லாதிக்கத்துக்கும் உள்ளாகி அனுபவித்த இன்னல்கள் சொல்லுந்தரமன்று இவ்வின்னல்களில் இருந்து தமிழ் இனத்தை விடுதலை பெறச் செய்ய வேண்டும். ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி தமிழ் மண் காப்பாற்றப் பட வேண்டும் என அயராது உழைத்தான் தம்பி நிசாந்தன். கதிரிப்பாயைச் சேர்ந்த திரு.எஸ். அமிர்தலிங்கமும் உரையாற்றினார்.

கதிரிப்பாய் இல்லத்தில் இருந்து தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் இராணுவ அணிவகுப்பு, பான்ட் வாத்தியம் சகிதம் ஊர்வலமாக அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு எடுத்து வரப் பட்ட பூதவுடல் பஸ் நிலைய மண்டபத்தில் பொது மக்களின் அஞ்சலிக்கு வைக்கப் பட்ட பின்னர் அதே ஊர்வலமாக கதிரிப்பாய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டு மரியாதை வேட்டுக்களுடன் ஈமக் கிரியைகள் நடைபெற்றது. (16)

# பாடசாலைஅமைத்துதருமாறு அரசாங்க அதிபரிடம் மகஜர்

(சாவகச்சேரி)

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்ட, குடியேற்றத் திட்டத்தினருக்கு, தமது குடியேற்றத் திட்டத்திற்கு அருகாமையில் ஒரு பாடசாலை அமைத்துத்தரவேண்டும்.

அதுநான்காம் ஆண்டுவரை உள்ளஆரம்பபாடசாலையாக இருந்தாலும் பரவாயில்லை பாடசாலை ஒன்றுவேண்டும். மேற் கண்டவாறு மிருசுவில் படித்த பெண்கள் குடியேற்ற திட்டத்தின் குடி யேற்றவாசிகள் யாழ் அரசாங்க அதிபர் திரு அன்ரன் அல்பிரெட்டிடம் மகஜர் ஒன்றைசமர்ப்பித்தார்.

அந்தமகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது. எமதுகுழந்தைகள் ஆரம்ப வகுப்புக்குக் கூட வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது. இதன் காரணமாக எமது சிறுவரின் ஆரம்பக் கல்விக்குபெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது.

இப் பாதிப்பை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். கடைசி ஓர் ஆரம்ப பாடசாலையாவது இங்குஅமைக்கப்படவேண்டும்,

இதன் மூலம் இக்குடியேற்ற வட்ட சிறார்களுக்கானகல்வி வசதியை ஏற்படுத்தித் தாருங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (35)

# சீனி விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்ட, பாஸைசயூர், கொழும்புத்துறை போன்ற இடங்களில் இருக்கும் பல சரக்கு கடைகளில் சீனியின் விலை ஒவ்வொரு கடைகளிலும் வித்தியாசமாகக் காணப்படுகிறது.

சில வர்த்தகர்கள் 30ரூபாவாகவும் சிலர் 32ரூபாவாகவும் விற்பனை செய்கிறார்கள். (43)


வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
பயங்கரச் சண்டைகள் நிறைந்த படம்!!......
FISTFULL OF DOLLERS:
(Cinemascope)

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ், மனோரமா, ஜெய்சங்கர், வை. ஜி. மகேந்திரன் நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன் ...

இலங்கைச் சுங்க அலுவலகம்
யாழ்ப்பாண மாவட்டம்
சுங்க விற்பனை 2/90


... வந்தது.

கான இந்த உயர்தரப் பாட சாலையில் ஜீ சீ. ஈ. உயர் தர வகுப்பு வரை மனையியல் பாடம் கற்பிக்கப் பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இங்கு மனையியல் கூட வசதியோ,

பகீரத முயற்சியின் காரணமாக இப்பாடசாலை மாணவிகள் ஜீ. சீ. ஈ. சாதாரண தரம், ஜீ.சீ.ஈ.உயர்தரம் பரீட்சைகளில், (மனையியல் பாடத்தில்) சிறந்தசித்திகளை கடந்த காலங்களில் பெற்று வந்துள்

ஜனாபா எம்.செயினுலாப்தீன் அவரதுகவனத்திற்குஇதனை கொண்டு வந்தார்.

விரைவில் இக் குறையைத் தீர்க்கத் தாம் ஆவன செய்வதாகத் திரு. நடராசா உறுதி அளித்தார். (53)

## இலங்கைச் சுங்க அலுவலகம்

## யாழ்ப்பாண மாவட்டம்

# சுங்க விற்பனை 2/90

### பொருட்களுக்கான கூறுவிலை கோரல்.

விற்பனைக்கான கீழ்வரும் பட்டியல்களில் விபரிக்கப்பட்டுள்ள ஒவ்வொருவகைப் பொருட்களுக்கான கிலோ ஒன்றின் அல்லது பொருள் ஒன்றின் விலைக்கேள்விகள் அரச்சு முத்திரையிடப்பட்ட உறைகளில் இடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சுங்க விற்பனை 2/90 எனக்குறிப்பிடப்பட்டிருப்பின் 06-06-1990 அன்று புதன்கிழமை காலை 10.00 மணிவரை யாழ் மாவட்ட சுங்க அலுவலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இங்ஙனம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகள் 06-06-1990 புதன்கிழமை காலை 10 00 மணியளவில் வருகைதந்துள்ள கேள்வினர் முன்னிலையில் கேள்விகள் உள்ளடக்கிய அரக்கு முத்திரையிடப்பட்ட உறைகள் பிரித்துப்பரிசீலிக்கப்படும். வருகை தர முடியாத கேள்வினர் எழுத்துமூலம் தமது பிரதிநிதிகளை நியமிப்பின் எனது அனுமதியுடன் அவர்கள் அலுவலகத்தில் சமுகமளிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதியுயர்ந்த விலைக்கான கேள்வி ஏற்றுக்கொள்ளுமிடத்து கேள்விக்குரியவர் முழுப் பொருட்களுக்குமான மொத்த விலைத்தொகையை வங்கி உத்தரவாதவோலை (Bank Draft) மூலம் மூன்று நாட்களுக்குள் செலுத்தவேண்டும். இதன்பின் தீர்மானிக்கப்பட்ட திகதியில் விற்பனைக்கான பொருட்கள் யாவும் காங்கேசன்துறை இறங்கு துறையிலிருந்து விநியோகிக்கப்படும். மேற்கூறிய நிபந்தனைகள் தவிர்ந்த மற்றைய நிபந்தனைகளுக்கு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானி இலக்கம் 291 (1984-03-30) இல் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

### பட்டியல்கள்

| | | |
|---|---|---|
| தலைமயிர் சூடி வகைகள் (Clips) | — | பட்டியல் ''அ'' |
| எவர்சில்வர் பொருட்கள் (Everslverwares) | — | பட்டியல் ''ஆ'' |
| சவர்க்கார வகைகள் | — | பட்டியல் ''இ'' |
| வாசனைப் பொருட்கள், செப்புப் பொருட்கள் | — | பட்டியல் ''ஈ'' |
| புடவை வகைகள் | — | பட்டியல் ''உ'' |
| வீடியோ மற்றும் மின்சார உபகரணங்கள் | — | பட்டியல் ''ஊ'' |
| படகுகள் / வள்ளங்கள் | — | பட்டியல் ''எ'' |
| வெளியிணைப்பு மோட்டார் இயந்திரங்கள் | — | பட்டியல் ''ஏ'' |

பட்டியல்களை ''அ'' இலிருந்து ''ஏ'' வரை யாழ்ப்பாண சுங்க அலுவலகத்தில் அல்லது காங்கேசன்துறை சுங்க அலுவலகத்தில் அல்லது காரைநகர் / ஊர்காவற்றுறை சுங்க அலுவலகத்தில் 05-06-1990 பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: இவைபற்றிய மேலதிக விபரங்களை யாழ் மாவட்ட சுங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சுங்க அத்தியட்சகர்
யாழ். மாவட்ட சுங்கப் பணிப்பாளருக்காக
/ வேல் /

சுங்க அலுவலகம்
601 / 1. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(B 1043)

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் சொக்கனின் மணிவிழா எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் தி.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் சொக்கனின் ஆக்கங்களின் கண் காட்சியுடன் அவரின் மாருதப் பிரவல்லி நூல் வெளியீட்டு விழாவும் இடம் பெறும்.

விழாவில் சொக்கன் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

## சீனி விலை அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்ட, பாசையூர், கொழும்புத்துறை போன்ற இடங்களில் இருக்கும் பல சரக்கு கடைகளில் சீனியின் விலை ஒவ்வொரு கடைகளிலும் வித்தியாசமாகக் காணப்படுகிறது.

சில வர்த்தகர்கள் 30ரூபாவாகவும் சிலர் 32ரூபாவாகவும் விற்பனை செய்கிறார்கள்'(43)

பட்டுள்ளதாவது. எமதுகுழந்தைகள் ஆரம்ப வகுப்புக்குக் கூட வெகுதூரம் செல்லவேண்டியுள்ளது. இதன் காரணமாக எமது சிறுவரின் ஆரம்பக் கல்விக்குபெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது.

இப் பாதிப்பை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். கடைசி ஓர் ஆரம்ப பாடசாலையாவது இங்குஅமைக்கப்படவேண்டும்,

இதன் மூலம் இக்குடியேற்ற வட்ட சிறார்களுக்கானகல்வி வசதியை ஏற்படுத்தித் தாருங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. (35)

## நிந்தவூர் பகுதிகளில் அடிக்கடி மின்சாரம் தடை

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பகுதியில் அடிக்கடி மின்சாரம் தடை ஏற்பட்டுவருவதால் மின்சாரப் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக மின்சாரம் அவசியமாகத் தேவைப்படும் இரவு வேளைகளில் தடை ஏற்பட்டு வருவதுடன், சில சமயம் இரவு முழுவதுமே மின்சாரம் இல்லாமல்போகும் அவலமும் ஏற்பட்டு வருகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்கள் இரவு வேலைகளில் வீட்டுப் பாடங்களை படிக்க முடியாத நிலையும் ஏற்படுகின்றன.

ஏற்கனவே இப் பகுதிக்கான மின்சார விநியோகம் உள்ளூராட்சி சபையின் கீழ் (பிரதேசசபையின்கீழ்)இருந்து வந்தது.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை மின்சார சபை நிந்தவூருக்கான மின்சார விநியோகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

இந்நிலையில் மின்சாரசபை பொறுப்பேற்ற பின்னர் சீரான மின் விநியோகம் கிடைக்குமென மின்பாவனையாளர்கள் எதிர்பார்த்தனர். (53)

## சமூக அபிவிருத்திகளை ச. ச. நிலை. பேணவேண்டும்

(விசேட நிருபர்)

வண்ணை, ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம் கடந்த பல ஆண்டுகளாக சமூக, சமய விளையாட்டுத் துறைகளில் ஆற்றி வருகின்ற பணி மிகவும் கவனிப்புக்குரிய ஒன்றாகும்''

பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களை வழங்கிப் பேசுகையில் நிலைய ஸ்தாபக அங்கத்தவர் திரு, ஆ. ஜெயக்குமார் மேற் கண்டவாறு கூறினார்.

திரு, ஆ. ஜெயக்குமார் தொடர்ந்து பேசுகையில் சனசமூக நிலையங்கள் சுற்றாடலில் வதியும் பொதுமக்களுக்கு பத்திரிகை வாசிப்புக்கு மட்டுமாக இயங்கு வதுடன் நின்று விடக்கூடாது. அதற்கு மேலும் சமூக அபிவிருத்தி, சுகாதாரம் போன்றவற்றையும் பேணும் வகையில் செயற்பட வேண்டும். இவ்வாறு பிரதம விருந்தினர் கூறினார்.

வைபவத்திற்கு தலைமை வகித்த நிலையத் தலைவர் திரு. து. விஜயக்குமார் பேசுகையில் ''எதிர்வரும் வருடங்களில் எமது போட்டிகள் சமயத்துறையுடன் சமூக விளையாட்டுத்துறை சார்ந்ததாகவும் அமைய இருக்கின்றன'' என்றார்.

திரு. க. சிவகுமாரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## அன்னை பூபதிவழியாகவே பஸ்கள்செல்ல வேண்டும்

(நிந்தவூர்)

கல்முனை பஸ் நிலையத்திலிருந்து, களுவாஞ்சிக் குடி, மட்டக்களப்பு முதலான பகுதிகளுக்குச் செல்லும் பஸ்வண்டிகள் யாவும் அன்னை பூபதி வீதிவழியாகச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தப் பட்டுள்ளது.

அதேபோல் அக்கரைப் பற்று, அம்பாறை பகுதிகளிலிருந்து வரும்பஸ்வண்டிகள் கிட்டங்கி வீதி, அன்னைபூபதி வீதி வீதி வழியாகக் கல்முனை பஸ் நிலையத்தை வந்தடைய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்திய போக்குவரத்து சபைச் செயலாற்று முகாமையாளரின் பணிப்பின் படி இந்த நடைமுறை அமுல் படுத்தப் படுகிறது.

இதனை மீறும் சாரதிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படு மென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (53

## ஊக்குவிப்பு அலவன்ஸ் இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பஸ்டிப்போ ஊழியர்களுக்கு ஆறு மாதகால ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப் படவில்லை அதேவேளை கச்சேரி, காகித ஆலை ஆசிரியர்கள், போன்றவற்றிக்கு இவ் அலவன்ஸ் வழங்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இதுபற்றி மட்டக்களப்பு மாவட்ட தொழிற்சங்கங்களிடம் அறிவித்தும் அவர்கள் கூட இதில் கவனம் செலுத்தவில்லை. இது பற்றி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மட்-அம்பாறை அரசியல் பொறுப்பாளரிடம் ஊழியர் குழுஒன்று சந்தித்து பேச இருக்கின்றது. (29)

சனி ஞாயிறு 10-30,2-30,
6-30,9-30

நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30.
6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி
கௌதமி, ரகுவரன்,
S. S. சந்திரன், பேபி
ஷாலினி, சரளா
நடித்த
ராஜா சின்ன ரோஜா
கவுஸ்புல் காட்சியாக
வெற்றிநடை போடுகிறது.

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10 30, 2 30, 630, 9 30
விஜயகாந், ரேகா,
செந்தில்
நடித்த
சொல்வதெல்லாம் உண்மை
B 878

ஸ்ரீதர் - (யாழ்.)
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி

ராஜா (யாழ்)
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை
நாட்களில்
10·00, 2·00, 4·45,
7 00, 9·45
Terence Hill Bud Spence
I AM FOR THE HIPPOPOTAMUS

# பாகிஸ்தான் இனக் கலகத்தில் மூன்று தினங்களில் 175 பேர் பலி!

(கராச்சி)
பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஹைதராபாத், கராச்சி நகரங்களில் நடைபெற்றுவரும் இனக்கலவரங்களில் கடந்த மூன்று நாட்களுக்குள் 175 பேர் உயிர் இழந்துள்ளனர்.

அமைதியை ஏற்படுத்த அரசியல் சாசனப்படியான அனைத்து வழி வகைகளையும் ஆராயுமாறு பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோவின் அரசுக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அறிவுறுத்தி இருக்கிறார்.

கடந்த இரண்டு வாரங்களாக சிந்து மாகாணத்தில் சிந்தி சமூகத்தவர்களுக்கும், மொகாஜிர் இனத்தவர்களுக்கும் இடையே மோதல்கள் இடம் பெற்று வந்தன. இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டனர்.

இராணுவத்தினை அனுப்பியதைத் தொடர்ந்தே சிந்து மாகாணத்தில் உயிர் இழப்புக்கள் அதிகமாகின என்று சிந்து மாகாண மக்கள் கூறுகின்றனர்.

கடந்த இரு வாரங்களாக நடைபெற்று வரும் கலவரங்களினால் 300 பேர் இறந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிககின்றன.

இதற்கிடையில் பாகிஸ்தானின் பாராளுமன்ற மூத்த உறுப்பினரான கலெக்டர் காஸ்கி ெசலூக்கி கராச்சி நகரத்தில் நடைபெற்ற கலவரங்களை நேரில் பார்வையிடச் சென்றபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இங்கு நடைபெற்று வரும் கலவரம் குறித்து பாகிஸ்தானிய ஜனாதிபதி குலாம் இஷாக்கான் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

ஹைதராபாத் நகரத்தில் சட்ட அமுலாக்கல் அமைப்புக்களின் திட்டமிடப்படாத நடவடிக்கைகளினால் பலர் உயிர் இழந்திருக்கின்றனர் என்றும், பெண்கள், குழந்தைகள் உட்பட அப்பாவி மக்கள் கண்மூடித்தனமாக கொல்லப்பட்டது தனக்கு அதிர்ச்சியைத் தந்துள்ளதாகவும் குலாம் இஷாக் கான் தெரிவித்திருக்கிறார்.

இச்சம்பவம் குறித்து நீதி விசாரணைக்கு குலாம் இஷாக் கான் உத்தரவு இட்டிருக்கிறார். அதனோடு பிரதம மந்திரி பெனாஸிர் பூட்டோவும் சிந்துமாகாணத்தில் நடைபெறும் வன்முறை குறித்து அதிகாரிகளுடன் விவாதித்தார்.

இதனிடையே சிந்து மாகாணத்தின் பல பகுதிகளிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# பர்மாத் தேர்தலில் தேசிய ஜனநாயக முன்னணி தெரிவு

(ரங்கூன்)
பர்மாவில்ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக லீக்வெற்றிபெற்றுள்ளது.

485 இடங்களில் 241இடங்களை அக்கட்சி வெற்றிபெற்றுள்ளதாக தேர்தல் அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

இன்னும் மூன்று வாரங்களுக்குள் உத்தியோக பூர்வ இறுதி முடிவுகள் வெளியான பின் இந்தக் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கும் எனவும் தேர்தல் அதிகாரிகள் கூறினார்கள்.

இருபது மாவட்டங்களின் முடிவுகள் அரச வானொலியில் அறிவிக்கப்பட்டன. இவற்றில் 18இடங்களில் தேசிய ஜனநாயக லீக் கட்சி வெற்றி பெற்றுள்ளது.

பெரும்பாலான மாவட்டங்களில் தேசிய ஜனநாயக லீக் கட்சி 75% வாக்குகளைப் பெற்றது இராணுவஆதரவு தேசிய ஒற்றுமைக் கட்சிக்கு 10இல் இருந்து 15% வாக்குத்தான் கிடைத்தது.

புதிய அரசியல் சாசனம் அங்கீகரிக்கப்பட்டவுடன் தேசிய ஜனநாயக லீக்கிற்கு அதிகாரத்தை ஒப்படைப்பதாக இராணுவம் தெரிவித்தது.

## ஆர்மேனியாவில் ஆயுத கோஷ்டி சுட்டு 22 பேர் பலி!

### லித்வேனியாவில் மின்சாரத் தட்டுப்பாடு

(மாஸ்கோ)
சோவியத் யூனியனில் ஆர்மேனியக் குடியரசில் ஆயுதம் தாங்கிய ஒரு கோஷ்டிக்கும் பொலிசாருக்கு ஏற்பட்ட மோதலில் இருத்பதிரெண்டு பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் சுதந்திரப்பிரகடனம் செய்த லித்வேனியாக் குடியரசுக் கெதிராக சோவியத் அரசு எரிபொருள் தடை விதித்ததன் விளைவாக லித்வேனியாவில் மின்சார விநியோகம் பெரிதும் சீர்குலைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன இப்பொழுது அங்கு இரண்டு மின்சக்தி நிலையங்களே இயங்கி வருகின்றனவாம்.

## பஞ்சாப்பில் 14பேர்கொலை!

பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் 14 இந்துக்களை கொன்றுள்ளார்கள்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 13 இந்துப் பண்ணை ஊழியர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் சீக்கிய தீவிரவாதிகள் அவர்களைக் கொன்றதாக கூறப்படுகிறது.

## யேமன்இணைப்பு சிங் வாழ்த்து

(டில்லி)
வடக்கு. தெற்கு யேமன் இரண்டும் ஒன்றிணைந்தது குறித்து இந்தியப்பிரதம மந்திரி வி.பி. சிங் ஏடன் பிரதம மந்திரிச்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

ஜனநாயக ரீதியில் அமைதியான வழியில் இந்த சாதனையை அடைந்தது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைவதாக தமது செய்தியில் பிரதமர் கூறிஇருக்கிறார்.

## வீடு கட்ட நன்கொடை

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில், புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ், அத்திவாரம் அமைத்து முடிந்த வீடுகளுக்கு கட்டட வேலை தொடர்வதற்கான நன்கொடைப் பணம் வழங்கப்பட்டு வருகிறது,

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ், பாரதி புரம் என்னும் கிராமத்தில் 96 வீடுகள் கட்டுவதற்கான நன்கொடைப் பணம் வழங்கப்பட்டது.

கற்பக புரம் கிராமத்தில் 40 வீடுகள் கட்டி முடிப்பதற்கான நன்கொடைப் பணம் வழங்க விருப்பதாக உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார்.
(தி)

## ஜப்பான் சோவியத் வர்த்தக உறவு

ஜப்பானுடன் 2000 ஆண்டு வரையிலான வர்த்தக அபிவிருத்தி பற்றி கருத்தரங்கு ஒன்று மொஸ்கோவில் நடைபெற்றது.

1988ஆம் ஆண்டில் இருந்து இரு நாடுகளும்மேற்கொண்ட வர்த்தகத்தின் பெறுபேறுகளை இரு தரப்பினையுஞ் சேர்ந்த வர்த்தகத்துறை நிபுணர்களும் ஆராய்ந்தனர்.

ஜப்பானிய சோட்டோபா நிறுவனத்தின் அனுசரணையுடன் சோவியத் அயல் துறை வர்த்தக உறவு அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.

விசேஷ பொருளாதார வர்த்தக வலயங்களை அமைப்பதன் மூலம் இரு தரப்பு வர்த்தக உறவுகளையும் மேலும் வளர்க்க முடியும் என்று ஜப்பானிய நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கூட்டுத் தொழில் முயற்சிகளை நக்ஹோடா துறைமுகத்தில் நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இந்தச் சந்திப்பின் போது ஆராயப் பட்டன.

## ஜேர்மன் இணைப்பு தாமதிக்கக் கூடாது

(பொன்)
கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜெர்மனியும் திட்டமிட்டபடி குறிப்பிட்ட காலத்தில் ஒன்றாக இணைய வேண்டுமென்றும் இல்லையேல் மேலும் பெருந் தொகையான ஜேர்மானியர்கள் கிழக்கு ஜேர்மனியில் இருந்துமேற்கு ஜேர்மணிக்கு வந்துகுவிவார்களென்றுமேற்குஜேமன்அதிபர்ஹெல்மெட்கோல்தெரிவித்துள்ளார்

திட்டமிட்ட படி ஜூலை மாதம் முதலாம் திகதியிலிருந்து டொச்மார்க் தான் இரண்டு ஜேர்மனிகளின் நாணயமாக இருக்குமென்றும் அதிபர் கோல் தெரிவித்தார்.

## இஸ்ரேலியருக்கெதிராக பொருளாதாரத் தடை

### யாசீர் அரபாத் கோரிக்கை

(பாக்தாத்)
இஸ்ரேலுக் கெதிராகப் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளையும் பகிஸ்கரிப்பையும் அரபு நாடுகள் மேற்கொள்ள வேண்டுமென்று பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் பாக்காத்தில் நடந்த அரபு மாநாட்டில் பேசுகையில் கேட்டுக் கொண்டார்.

சோவியத்திலிருந்து வரும் யூதர்கள் காஸாப் பகுதியிலும் மேற்குக் கரைப்பகுதியிலும் குடியேறுவதைத் தடை செய்ய வேண்டுமென்றும் யாசீர் அரபாத் கூறினார்.

இதே சமயம் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள ஜெருஸலேம் பகுதியில் நேற்று முன் தினம் நிகழ்ந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு இஸ்ரேலியர் கொல்லப்பட்டார். பத்துப் பேர் காயமடைந்தனர்.

# கொழும்பில் தமிழ் இலக்கிய சாகித்திய விழா எழுத்தாளர்களுக்குஜனாதிபதி பரிசுவழங்குவார்

தமிழ் இலக்கிய சாகித்திய விழா ஆகஸ்ட் முதலாம்திகதி முதல் ஐந்தாம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளது. இறுதி நாளன்று பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் விழாவில் ஜனாதிபதி திரு.ஆர். பிரேமதாசா பரிசில் வழங்கி எழுத்தாளர்களை கௌரவிப்பார்.

மேற்படி விழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கடந்த புதன்கிழமை இந்து சமய இந்து கலாசார அமைச்சின் இராஜாங்க அமைச்சர் திரு பி.பி தேவராஜ் தலைமையில் நடைபெற்றபொழுது அமைச்சர்இத்தகவலை வெளியிட்டார்.

தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்ட கூட்டததில் அமைச்சர் திரு. தேவராஜ் மேலும் தகவல் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு சாகித்திய பரிசு வழங்கப்படாமை கவலைக்குரியது அதனால்தான் அமைச்சை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் இதனை நிவர்த்தி செய்யும் முகமாக 87ஆம் ஆண்டு முதல் 88ஆம் ஆண்டு வரை வெளிவந்த நூல்களுக்கும் 89ஆம் ஆண்டிற்கான நூல்களுக்கும்பரிசளிக்க விரும்புகிறேன்.

தமிழ் இலக்கிய நூல்களை தகுதி வாய்ந்த ஆய்வாளர்களைக் கொண்டு ஒன்பது துறைகளாகப் பிரித்து பரிசு வழங்குவதுடன் தமிழ் இலக்கியவளர்ச்சிக்கு தொண்டாற்றிய ஏழு பெரியோர்கள் கௌரவிக்கப்பட விருக்கிறார்கள்.

தமிழ் இலக்கிய சாகித்திய பரிசில்களுடன் மாகாண ரீதியாக சிறந்த நூல்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். கொழும்பில் ஐந்து நாட்கள் இலக்கியபெருவிழாவக நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டன.

அத்துடன் விழாவில் நூல், சஞ்சிகை ஓவிய சிற்பக் கண்காட்சியுடன் கருத்தரங்கு, கவியரங்கு, பாரம்பரிய கலாசார நிகழ்ச்சிகளும் இடம் பெறும் வடக்கு கிழக்கு மலையகம் மாத்திரமன்றிநாடுதழுவிய ரீதியில் தமிழ் பேசும் எழுத்தாளர்களின் இலக்கிய விழாவாக அமைய வேண்டும்.

இலக்கிய விழாவின் போது நடைபெறவிருக்கும்கருத்தரங்கில் 80-களில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி சஞ்சிகை முயற்சிகள் ஈழத்து இலக்கியவளர்ச்சியில் எதிர்கால பணிகள் போன்ற ஆய்வுரீதியாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு அவைகளின் தீர்வுக்குரிய மார்க்கங்களும் கண்டறியப்படும்.

மற்றும் திரு. என். டி. சிவநாயகம் திரு. எஸ். எம் கமால்தீன் முன்னாள் நீதியரசர் எச் டபிள்யூ.தம்பையா திரு. மாணிக்கஇடைக்காடர் பிரேமஹிதிரு. ஞானசுந்தரம் திருடொமினிக் ஜீவா சில்லையூர்செல்வராசன்அந்தனிஜீவா திரு. எம். எம் உவைஸ் மேமன்கவி ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

அமைச்சின் செயலாளர் திரு. லோகேஸ்வரன், மற்றும் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (27)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

இழப்பாகும்.

ஆபிரிக்க நாடுகளில் கமரூன் என்றுமே பலம் வாய்ந்த அணியாகத் திகழ்கிறது. அத்துடன்

# புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை

இரண்டும் ஒன்றிணைந்தது குறித்து இந்தியப்பிரதம மந்திரி வி.பி. சிங் ஏடன் பிரதம மந்திரிச்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருக்கிறார்.

ஜனநாயக ரீதியில் அமைதியான வழியில் இந்த சாதனையை அடைந்தது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைவதாக தமது செய்தியில் பிரதமர் கூறிஇருக்கிறார்.

பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் சுதந்திரப்பிரகடனம் செய்த லித்வேனியாக் குடியரசுக் கெதிராக சோவியத் அரசு எரிபொருள் தடை விதித்ததன் விளைவாக லித்வேனியாவில் மின்சார விநியோகம் பெரிதும் சீர்குலைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன இப்

## 14பேர் கொலை!

பஞ்சாப்பில் சீக்கிய தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுபவர்கள் 14 இந்துக்களை கொன்றுள்ளார்கள்.

பீகார் மாநிலத்தைச் சேர்ந்த 13 இந்துப் பண்ணை ஊழியர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் சீக்கிய தீவிரவாதிகள் அவர்களைக் கொன்றதாக கூறப்படுகிறது.

னும் கிராமத்தில் 96 வீடுகள் கட்டுவதற்கான நன்கொடைப் பணம் வழங்கப்பட்டது.

கற்பக புரம் கிராமத்தில் 40 வீடுகள் கட்டி முடிப்பதற்கான நன்கொடைப் பணம் வழங்க விருப்பதாக உதவி அரசாங்க அதிபர் இமெல்டா அற்புதராஜா தெரிவித்தார். (தி)

யிட்டார்.

தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும் கலந்து கொண்ட கூட்டதில் அமைச்சர் திரு. தேவராஜ் மேலும் தகவல் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு சாகித்திய பரிசு வழங்கப்படாமை கவலைக்குரியது

தமிழ் இலக்கிய சாகித்திய பரிசில்களுடன் மாகாண ரீதியாக சிறந்த நூல்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படும். கொழும்பில் ஐந்து நாட்கள் இலக்கியபெருவிழாவக நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் விழாவில் நூல், சஞ்சிகை ஓவிய சிற்பக் கண்காட்சியுடன் கருத்தரங்கு, கவியரங்கு, பாரம்பரிய கலா

ரசர் எச் டபிள்யூ. தம்பையா திரு. மாணிக்கஇடைக்காடர் பிரமஹிதிரு. ஞானசுந்தரம் திருடொமினிக் ஜீவா சில்லையூர்செல்வராசன் அந்தனிஜீவா திரு. எம். எம் உவைஸ் மேமன்கவி ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

அமைச்சின் செயலாளர் திரு. லோகேஸ்வரன், மற்றும் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (27)

# உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

# தெரிவு முறை

உலகக்கிண்ணப் போட்டிகள் தொடங்க இன்னும் ஒரு வாரம் மட்டுமே உள்ளது. இப்பொழுதே எல்லாத் தரப்பினரும் இதைப்பற்றி பரபரப்பாகப் பேசத் தொடங்கி விட்டார்கள். உலக நாடுகளில் தெரிவு செய்யப்பட்ட 24 நாடுகள் இக்கிண்ணத்திற்காகப் போட்டியிடப் போகின்றன. இந்த நாடுகள் எவ்வாறு இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றார்கள்,

## தெரிவுமுறை

உலக கால்பந்தாட்ட அமைப்புக்கள் அனைத்துக்கும் மேலானது FIFA எனப்படும் சர்வதேச உதைபந்தாட்டச் சங்கமாகும். இவர்களே உலகக்கிண்ணப் போட்டிகளை நடாத்துபவர்கள். இந்த வகையில் உலக நாடுகள் பல பிராந்தியங்களாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவதாக ஐரோப்பிய நாடுகள் UEFA என்ற என்ற அமைப்பில் போட்டியிடுகின்றன. இங்கு நாடுகள் ஏழு பிரிவுகளாகப் பிரிந்து போட்டியிடுகிறார்கள். இதில் வெற்றிபெறும் 7 நாடுகளும் தெரிவு செய்யப்படுகின்றன. அதேவேளை பிரிவு 2, 3, 4, 6இல் போட்டியிட்ட 2ஆம் இடம்பெற்ற நாடுகளும் தகுதி பெறுகின்றன. தொடர்ந்து 1ஆம் 5ஆம் குழுக்களில் 2ஆம் இடம்பெற்ற அணிகள் மீண்டும் மோதி இதில் வெல்லும் அணியும் தகுதி பெறுகின்றது. இறுதியாகவுள்ள 7ஆம் பிரிவின் 2ஆம் இடம்பெற்ற அணி ஓஸானிய இஸ்ரேல் அணியில் தெரிவு செய்யப்பட்ட நாட்டுடன் மோதி ஓரிடம் பெற முயற்சிக்கும் இந்த வகையிலேயே ஐரோப்பிய நாடுகளில் தெரிவு நடைபெறுகின்றது. எனவே ஐரோப்பா இறுதிப் போட்டிக்கு 12 அல்லது 13 நாடுகளை அனுப்பும் தகுதி பெறுகின்றது.

அடுத்தபிரிவு Conebol எனப்படும். இதில் தென் அமெரிக்க நாடுகள் போட்டியிடும். இப்போட்டிகளின் முடிவில் 4 நாடுகள் இறுதிப் போட்டிக்காகத் தெரிவு செய்யப்படும். மூன்றாம் பிரிவு வடக்கு மத்திய அமெரிக்கா, கஸ்பியன் நாடுகள் இணைந்த Concacaf ஆகும். இப்பிரிவில் இருந்து ஒரு அணி தகுதி பெறும் இன்னொரு பிரிவு UEFA/ ஓஸானிய இஸ்ரேல் பிரிவாகும் இவ் இரண்டு பிரிவுகளில் போட்டியிட்டு வெற்றிபெறும் நாடும் உலகக்கிண்ண இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும். அடுத்ததாக ஆபிரிக்காக் கண்டத்தில் இருந்து நொக் அவுட் முறையில் 2 நாடுகள் தெரிவாக, ஆசியாக் கண்டத்தில் இருந்தும் 2 நாடுகள் தெரிவாகும். இவ்வகையில் மொத்தம் 22 நாடுகள் தத்தம் பிராந்தியங்களில் பெற்ற வெற்றிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். இறுதியாக, உலகக் கிண்ணத்தை வென்ற நாடும் இம்முறை உலகக் கிண்ணப் போட்டிகளை நடாத்தப் போகும் நாடும், இயல்பாகவே தகுதி பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள். எனவே மொத்தம் 24 நாடுகள் உலகக்கிண்ண இறுதிப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றவர்களாக இருப்பார்கள்.

## மீண்டும்

## ஐக்கிய அமெரிக்கா

இந்த வகையிலேயே 1990 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு 24 நாடுகள் அணிவகுத்து நின்கின்றன. இவை 112 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளாகும். இத்தெரிவிற்காக 313 பூர்வாங்கப் போட்டிகள் உலகம் முழுவதும் நடைபெற்றன. இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும் என எதிர்பார்க்கப்பட்ட பல நாடுகள் ஆச்சரியத்துக்குரிய வகையில் தகுதிபெறத் தவறின் சிறப்பாக பிரான்ஸ்,சீனா,குவைத், சவுதி அரேபியா, பராகுவே போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம். அதேவேளை ஐக்கிய அமெரிக்கா நாற்பது வருடங்களின் பின் உலகக்கிண்ணப் போட்டியின் இறுதியாட்டங்களில் ஆட வருகின்றது. இவர்கள் சகலரினதும் விஷேட கண்ணோட்டத்துக்கு உள்ளாகிறார்கள.

அணியையும் தோற்கடித்தல் என்பது இலகுவானதல்ல. அதே போல ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மே.ஜேர்மனி, யூகோஸ்லாவியா, கொலம்பியா, நாடுகளுடன் போட்டியிட வேண்டும். இதில் மிகக் கடினமான அணி மேற்கு ஜேர்மனியாகும். தற்போதைய நிலையில் மே.ஜேர்மனியுடன் எதிர்த்தாடும். ஐ.அரபு எமிரேட்ஸ் ஆறு கோல் வித்தியாசத்தில் தோற்கடிக்கப் பட்டாலும் ஆச்சரியமில்லை. என்று புதிய பயிற்றுனர் கவலைப் படுகின்றார்.



## ஆசிய ஆபிரிக்க நாடுகள்

ஆசிய நாடுகளில் தென் கொரியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இரண்டும் இம்முறை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. ஆபிரிக்காவில் இருந்து கமரூன், எகிப்து இரண்டும் தகுதி பெற்றுள்ளன. தென்கொரியா 'E' பிரிவில் பெல்ஜியம், ஸ்பானியா, உருகுவே நாடுகளுடன் போட்டியிட வேண்டியுள்ளது. இவை மூன்றும் திறமையான அணிகள் இதில் எந்தவொரு

அண்மையில் குவைத்துடன் நடைபெற்ற சிநேகபூர்வ போட்டியொன்றில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 6 கோல் வித்தியாசத்தில் தோற்றுப் போயிற்று. இதற்குக் காரணம் பயிற்றுனர்களைத் திடீர் திடீரென மாற்றியமை எனக் கூறப்படுகின்றது. தற்போதைய பயிற்றுனரான கார்லோஸ் அல்பேட்டோ கருத்துத் தெரிவிக்கையில் அணியை புதிதாகவே உருவாக்க வேண்டியுள்ளது என்று கூறுகிறார். மேலும் முக்கிய விளையாட்டு வீரராகிய அப்துல் ரசாக் இப்ராகீம் விளையாடத் தடை விதித்திருப்பதும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு பெரும் இழப்பாகும்.

ஆபிரிக்க நாடுகளில் கமரூன் என்றுமே பலம் வாய்ந்த அணியாகத் திகழ்கிறது. அத்துடன் பல விளையாட்டு வீரர்கள் ஐரோப்பிய கழகங்களுக்கு ஆடுபவர்கள் இப்படியாகத் திறமை மிக்கவர்கள் இடம் பெயர்ந்து விடுவதால் கமரூன் உண்மையான தன் திறமையைக் காட்ட இயலவில்லை

## நிர்மலன்

என்ற ஆதங்கமும் உண்டு. கமரூன் ரஸ்யா, ஆர்ஜென்டீனா,றோமானியா நாடுகளுடன் போட்டியிட்டாக வேண்டும். இவர்கள் நல்லதொரு எதிர்ப்பைக் காட்டுவார்கள் என்றே எதிர் பார்க்கப் படுகிறது. எகிப்து முதன் முறையாக உலகக் கிண்ணப் போட்டிகளுக்குச் செல்கின்றது. இவர்கள் இங்கிலாந்து, நெதர்லாந்து, அயர்லாந்து ஆகிய நாடுகளுடன் போட்டியிட வேண்டும். இப்பிரிவில் நெதர்லாந்து மிகவும் பலம் வாய்ந்த சக்தி ஐரோப்பிய வீரர்களில் சிறப்புறப் பேசப்படும் 3 வீரர்கள் நெதர்லாந்து அணியில் இடம் பெறுகிறார்கள் எமது ஆசிய ஆபிரிக்க நாடுகள் எவ்வாறு இப்போட்டிகளை எதிர் கொள்ளப் போகிறார்கள். முதல் சுற்றில் தகுதி பெற்று இரண்டாவது சுற்றுக்கு வரப் போகும் ஒவ்வொரு பிரிவின் முதல் இரண்டு இடங்களில் ஒன்றையேனும் பெற்றுக் கொள்வார்களா? அவ்வாறு பெற்றுக் கொண்டு கால் இறுதி ஆட்டத்துக்கு வந்தாலே அவர்களின் திறமை விதந்து பேசப்படும். தற்போது லத்தீன் அமெரிக்க, ஐரோப்பிய பயிற்றுனர்களை ஆசிய, ஆபிரிக்க நாடுகள் பெற்றுக் கொண்டு தம் அணிகளை வளர்த்து வருவதைக் குறிப்பிட வேண்டும். எனவே ஐரோப்பிய, லத்தீன் அமெரிக்க விளையாட்டு நுட்பங்கள், வேதம் முதலியன இவ் அணிகளில் ஊடு பாய்ந்திருக்கும். எனவே எமது அணிகளும் சோடை போகாதென்று நம்ப இடம் உண்டு. (தெரிவு முறைகள் நன்றி;-ஐலண்ட்)

# புனரமைப்பு வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை துரிதப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படிஅந்தந்த மாவட்ட அரசாங்க அதிபர்களும் உதவி அரசாங்க அதிபர்களும் புனர்வாழ்வு புனர்நிர்மாண வேலைகளுக்கு பணிப்பாளர்களாகவும், உதவிப் பணிப்பாளர்களாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்

இது தொடர்பாக நாட்டில் உள்ள அரசாங்க அதிபர்களின் மாநாடு விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் ஏ. எஸ். அதிகாரி தெரிவித்தார்.

வன் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்நிர்மாண. புனர்வாழ்வு உதவிகள் கிடைப்பதில்லை என்ற புகார்கள் அமைச்சுக்கு கிடைத்துள்ளதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

# பஸ்களில் மீன் ஏற்றுதல்

(வந்தாறுமூலை)

வெருகலில் இருந்து காலையில் மட்டக்களப்புக்கு செல்லும் பஸ்வண்டியில் இறால், மீன் போன்ற பொருட்களை அளவுக்கு அதிகமாக ஏற்றுவதால் பிரயாணிகள் பெரும் அசௌகரியங்களை அனுபவிக்கின்றனர்.

எனவே மேலதிகாரிகள் கவனம் செலுத்தி இப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் கேட்கின்றனர். (29)

## வாசக நேயர்களுக்கு ....

'ஈழநாதம்' வெறும் செய்திப் பத்திரிகையாக மட்டுமல்ல, மாணவர்களுக்கும் மற்றும் சாதாரண பொதுமக்களுக்கும்பயனுள்ள,சுவையானபகுதிகளையும் தினமும் தருவது தெரிந்ததே. தினமும் வெளிவரும் விசேஷபகுதிகள்பற்றிய விபரம் இங்கேதரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| சனி | - | சத்தீஸ்மாஸ்ரரின் |
| ஞாயிறு | | A/L இரசாயனம் |
| திங்கள் | - | சமூகத்தைப்பாதிக்கும் பிரச்சினைகள் |
| செவ்வாய் | - | A/L இரசாயனம் வினாவிடைகள் |
| புதன் | - | விளையாட்டுப்பகுதி |
| வியாழன் | - | கதம்பமாலை |
| வெள்ளி | - | மஞ்சரி |

# சனசமூக நிலையங்களுக்கு வவுனியாவில் சம்மேளனங்கள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் சனசமூக நிலையங்களுக்கான சம்மேளனங்கள் அமைக்கப் பட்டுள்ளன.

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரி விலும், செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் இச்சம்மேளனங்கள் ஒவ்வொன்றாக அமைக்கப்பட்டுள்ளன.

சனசமூக நிலையங்களை ஒன்றிணைப்பு செய்வதற்கும் கிராம மக்கள் மட்டத்தில் பல சேவைகளைச் செய்வதற்கும் இச்சம்மேளனங்கள் உதவியாக அமையுமென இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா சம்மேளனத்தின் தலைவராக அ. சத்தியகாந்தியும், இதன் பொதுச் செயலாளராக ந. பாலசிங்கமும் அண்மையில் தெரிவு செய்யப் பட்டனர்.

மேலும் சில சம்மேளனங்களை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)

# தீவுப் பகுதியின் அபிவிருத்தி பற்றி வேலணையில் ஆலோசனை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி அபிவிருத்தி பற்றியும், இப்பகுதி மக்கள் எதிா நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இப்பிரச்சினைகளுக்கான நிவாரணங்களைக் தேடும் பொருட்டு வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆலோசனை மகாநாடொன்று கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இம்மாநாட்டின் யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பகுதிகளின் விஷேட ஆணையாளர்கள் அதிபர்கள். கல்வி அதிகாரிகள், பல்வேறுபட்ட திணைக்கள அதிகாரிகள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்கள் தீவுப்பகுதி மக்கள் எதிர் நோக்கும் பல் வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்து அதற்கேற்ற தீர்மானங்களை எடுத்தனர். (1)

## விபத்தில் பூசகர் மரணம்

(வடமராட்சி-கிழக்கு)

மோட்டார் சைககிள் மோதிய கோயில் பூசகர் மரணமானார்.

உடுத்துறைஐந்தாம் பனைப் பிள்ளையார் கோவில் பூசகரான கணபதிப்பிள்ளை சிற்றம்பலம் என்பவரே மோட்டார் சைக்கிளால் மோதுண்டு யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்பு மரணமானவர்.

## ஈட்டி எறிதலில் புதிய சா்தனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் 'ஈட்டி எறிதலில்' காரைநகர் கோவளம் இளைஞர் மன்ற வீரர் செ. ஞானசோதி புதியசாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் இவர் 48.48 மீற்றர் தூரம் ஈட்டி எறிந்து முன்னைய சாதனையை முறியடித்துள்ளார். இது வரை யாழ். இந்து முன்னாள் வீரர் எஸ். தயாளன் 43.87 மீற்றர் எறிந்த சாதனையே இருந்து வந்தது.

அகில இலங்கை ரீதியில் விரைவில் நடைபெறவுள்ள போட்டியில் வீரர் செ. ஞானசோதி கலந்து கொள்ளவுள்ளார். அகில இலங்கை ரீதியில் 'ஈட்டி எறிதலில்' 58 மீற்றரே சாதனையாகவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

AIR CONDITION & REFRIGERATION
குளிரூட்டலும் பாதுகாத்தலும்
புதிய துரித பயிற்சி நெறி
ஆரம்பம்
2nd - June - 1990
செய்முறைப் பயிற்சியுடன் கூடியது
இலகு செய்முறை விளக்கம்
விபரங்கட்கு
North Ceylon Technical Institute
14 St. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
(R 1036)

வாகன உரிமையாளர்களே!
உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!

# பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலைக்கு முதுகெலும்பு போன்றவை

(பண்டத்தரிப்பு)

பாடசாலைக்கு முதுகெலும்பு போன்றது பாடசாலை அபிவிருத்திச்சங்கங்கள். அதன் ஊக்கமான பங்களிப்பும் உதவிகளும் பாடசாலை அதிபர், ஆசிரியரை கரிசனையோடு கல்வியை வளர்க்க உற்சாகமும் ஊக்கமும் உரமூட்டுவதாக அமையும்.

பாடசாலையும் வீடும் தத்தமது பங்களிப்புகளை உரிய முறையில் செய்ய மாணவர் கல்வி மேன்மை அடையும். இந்த உண்மையை இருசாராரும் உணர்ந்து கூட்டாகப்பணியாற்றுதல் அவசியம்.

இவ்வாறு பண்டத்தரிப்புமகளிர் கல்லூரி அதிபர் திரு தே. தம்பிராசா அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் இந்தியப்படை இங்கு முகாம் அமைத்து விமான இறங்கு தளம் அமைத்துஇருந்ததால், கல்லூரிநீண்ட காலமாகப்பேணிக் காத்து வைத்திருந்த பல பெறுமதிமிக்கஅரும் பொருட்கள், நாட்டிய நாடக உடைகள், திரைச்சீலைகள்மற்றும் கலைநிகழ்ச்சிக்குத்தேவையான பொருட்கள், மாணவரின் பிறப்புச் சான்றிதழ்கள் விடுகைப் பத்திரங்கள் ஆவணங்கள் மாணவிகளின் விடுதிப் பொருட்கள், கட்டில்மெத்தைகள் பாடசாலை சுற்றுவேலிகள் அனைத்தும் இல்லாமல் போயின.

பிள்ளைகள் தொகை அதிகரிப்பால்வகுப்பறைகள்போதாதுள்ளது. மாணவிகள் விடுதிகளில் வகுப்புகள் நடத்தப் படுகின்றன என்றார்.

மாணவியர் தமது சைக்கிள்களை விடுவதற்கு சைக்கிள் விடும் இடம்தேவைப் படுகின்றது. வெய்பிலில் நிற்க விடுவதால் சில வேளைகளில் காற்றுப்போய் வீடு போவதற்கு மாணவிகள் சிரமப் படுகின்றனர். என்று பாடசாலை தேவைகளையும் அவர் சுட்டிக் காட்டினார்.

1989இல்கொண்டாடியிருக்க வேண்டிய 50 ஆண்டு பூர்த்தி விழா கொண்டாட முடியவில்லை என்றபோது இவ்வாண்டு கொண்டாடி மலர் ஒன்றை வெளியிட வேண்டும் என சபை ஏகமனதாக கருத்துத் தெரிவித்துள்ளது.

அதிபர் நன்றி தெரிவிக்கையில் கடந்த காலங்களை விட இவ்வாண்டு பெருந்தொகை பெற்றோர் வருகைதந்திருப்பது பாடசாலை வளர்ச்சியிலும் தமது பிள்ளைகளின் கல்வியிலும்அதிககவனங்கொண்டிருக்கிறார்கள் பெற்றோர் என்பதன் அறிகுறியாகத் தான் கருதுவதாகத் தெரிவித்தார்.

வித்துவான் வேல்முருகனின் நன்றி நவிலலுடன் கூட்டம் நிறைவெய்தியது. (12)

## பிரிட்டிஷ் தூதருக்கு அணிவகுப்பு மரியாதை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ்ப்பாணம் வந்த பிரிட்டிஷ் தூதுவர் திரு டேவிற் கிளஸ்டல், திருமதி கிளஸ்டல் ஆகியோருக்கு யாழ் மாவட்ட திரிசாரணர் குழு சாரணர் அணிவகுப்பு மரியாதையை ஏற்பாடுசெய்தது.

யாழ் ஆங்கில அக்கடமியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கலந்துகொண்ட பிரிட்டிஷ் தூதுவரும் பாரியாரும் அதனைப் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

யாழ் இந்துக்கல்லூரி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி சாரணர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## மேற்பார்வை குழு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வைத்தியசாலை மேற்பார்வைக்குழு வட-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளரின் சிபார்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அரச அதிபர் திரு. ஆர் யோகநாதன் தெரிவித்தார்.

மேற்படி குழு அமைச்சின் சிபார்சு கிடைத்தவுடன் தமது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் என்றார். (37)

## முதியவர் தற்கொலை!

(வவுனியா)

ஓமந்தை மருதோடை கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

சின்னத்தம்பி சுப்ரமணியம் (வயது 67) என்பவரே மேற்படி தற்கொலை செய்து கொண்டவராவார்.

மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வவுனியா அரசாங்க வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து வைத்தியசாலையில் ஞாயிற்றுக் கிழமை இவர் இறந்தார்.

தற்போது இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்திசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

## சடலத்தை வார்ட்டிலிருந்து

# வடமராட்சி கிழக்கிற்கு ஓரிரு மாதங்களில் மின்சாரம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிற்கு ஓரிரு மாதங்களில் மின்சாரம் கிடைத்துவிடும்.

தற்போது புதுக்காட்டில் இருந்து மருதங்கேணி வரை அதிசக்திவாய்ந்த மின்கம்பி இணைப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

மருதங்கேணி சந்தியில் அமைக்கப்படவிருக்கும் 'ட்ரான்ஸ்போமரில்' இருந்து மருதங்கேணி, தாளையடி ஆகிய இடங்களுக்கு ஓரிரு மாதங்களில் மின்சாரம் கிடைத்துவிடும்.

இலங்கை மின்சார சபை தற்போது துரிதகதியில் மின் இணைப்பு வேலைகளைச் செய்து வருகின்றது.

1993ஆம் ஆண்டளவில் வடமராட்சி கிழக்கு முழுவதற்கும் மின்சாரம் கிடைத்துவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே வரணியிலிருந்து குடத்தனை, அம்பன் ஆகிய பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க கடந்த ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (36)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரிக்கெட் விளையாட்டுத் துறைக்கு புத்துயிர் அளிக்கப் படவிருப்பதாக மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு ஆர். யோகநாதன் தெரிவித்தார்.

இதனையடுத்து பாடசாலைகளில் மீண்டும் கிரிக்கெட் ஆட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் கூறினர்.

கழகங்களுக் கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்தப்படும்.

பாடசாலைகளுக்கும், கிரிக்கெட்கழகங்களுக்கும் தேவையான உபகரணங்கள் வழங்கப் படும்.

இவ் விளையாட்டுத் துறைக்கு புத்துயிர் அளிப்பதோடு வீரர்களும் கௌரவிக் கப்படுவார்கள்.

மாவட்ட கிரிக்கெட்விளையாட்டுசபைக்கு திரு ஜஸ்டின் இராஜேந்திரம் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இவ்வாறு அரசாங்க அதிபர் கூறினார். (37(

## 9-ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 — 06



உதிர்வு 09 — 06

செய்முறைப் பயிற்சியுடன் கூடியது
இலகு செய்முறை விளக்கம்
விபரங்கட்கு

North Ceylon Technical Institute
14 St. PETERS LANE, HOSPITAL ROAD, JAFFNA.
(R 1036)

தியசாலையில் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வைத்தியசாலை மேற்பார்வைக்குழு வட-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு செயலாளரின் சிபார்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை அரச அதிபர் திரு. ஆர் யோகநாதன் தெரிவித்தார்.

மேற்படி குழு அமைச்சின் சிபார்சு கிடைத்தவுடன் தமது செயல்பாடுகளை ஆரம்பிக்கும் என்றார். (37)

படி தற்கொலை செய்து கொண்டவராவார்.

மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வவுனியா அரசாங்க வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து வைத்தியசாலையில் ஞாயிற்றுக் கிழமை இவர் இறந்தார்.

தற்போது இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்திசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

இதனையடுத்துபாடசாலைகளில் மீண்டும் கிரிக்கெட் ஆட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் அரசாங்க அதிபர் கூறினர்.

கழகங்களுக் கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி நடாத்தப்படும்.

கப்படுவார்கள்.

மாவட்ட கிரிக்கெட்விளையாட்டுசபைக்கு திரு ஜஸ்டின் இராஜேந்திரம் தலைவராக நியமனம் பெற்றுள்ளார்.

இவ்வாறு அரசாங்க அதிபர் கூறினார். (37(

வாகன உரிமையாளர்களே!

உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!

சகலவிதமான மசகு எண்ணெய் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வைபவங்களுக்குத் தேவையான
கதிரைகள், தகரப் பந்தல் வாடகைக்குக் கிடைக்கும்.

தேவை: உருக்குத் தளபாடங்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ்
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(B. 959)

## சடலத்தை வார்ட்டிலிருந்து அகற்ற 5 மணி நேரம்!

(வடமராட்சி)

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியின் நிர்வாகச் சீர்கேட்டால் இறந்த நோயாளி ஒருவரின் சடலம் சுமார் ஐந்து மணிநேரமாக கட்டிலில் தேடுவாரற்ற நிலையில் இருந்த சம்பவம் நேற்று இடம் பெற்றது.

நேற்று அதிகாலை 3 மணி அளவில் கந்தசாமி செல்லையா (75 வயது) என்ற நோயாளி இறந்துவிட்டார்.

ஆஸ்பத்திரி விதிகளின் படி ஒருவர் ஆஸ்பத்திரி வார்ட்டில் இறந்தால் இருமணி தியாலங்களுக்குள் கட்டிலை விட்டு அப்புறப்படுத்த வேண்டும்.

செல்லையா இறந்தது குறித்து நோயாளிகள் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

சடலம் வார்ட்டில் இருந்ததால் அருகில் இருந்த நோயாளிகள் வார்ட்டை விட்டு வெளியே சென்று விறாந்தைகளில் இருந்தனர்.

மந்திகை ஆஸ்பத்திரியின் சீர்கேடுகள் குறித்து சில தினங்களுக்கு முன்னர் சுகாதாரப் பணிப்பாளர் கலந்துகொண்ட கூட்டம் ஒன்றும் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது. (68)

9-ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 — 06 — 1914 | 09 — 06 — 1981 |

திரு. பொன்னையா கந்தசாமி
திதி 30-5-1990
உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!
துயருறுவோர்— அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகள், மருமகன்; பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
மூர்த்தநயினார் கோவிலடி
''விஷ்ணுவாசா''
ஆனைக்கோட்டை.
(R/ 313)

வடமராட்சி வதைபட்ட வேளையில்... சிதையேறிய சீர்மிகு
வீரவேங்கைகளுக்கு எமது வீர வணக்கம்

அழிபட்ட அப்பாவி மக்களுக்கு
எமது கண்ணீர் அஞ்சலி!

அடைக்கலம் தந்து உதவியோர்க்கு
நன்றி! நன்றி! நன்றி!

--வல்வை மக்கள்
R. 315

## சிந்தனைக்கு

பயிற்சியும், பக்குவமும் தேவைப்படாத ஒரே தொழில், அரசியல்தான் என்று கூறலாம்.

— ராபர்ட் லூயிஸ்டீவன்ஸன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 30 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண். 05

# இந்த சந்தர்ப்பத்தையும் கைவிட்டால்...?

வடக்குக் கிழக்கு மாகாணப் பிரச்சினையை ஐக்கிய தேசியக் கட்சி மட்டும் தனித்து நின்று தீர்க்க முடியாதென்றும் இதில் எவர் ஒத்துழைப்புத்தர முன்வந்தாலும் தாம் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி பிரேமதாசா பகிரங்கமாகக் கூறியிருக்கிறார்.

தமிழர் பிரச்சினை இன்று நேற்றுத் தொடங்கிய பிரச்சினையல்ல. ஐம்பதாண்டு காலப்பிரச்சினையை அவசர அவசரமாகத் தீர்த்துவிட முடியாது என்று வடக்கு கிழக்கு சமாதானக் குழுத்தலைவரும் நீதி அமைச்சருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் கூறியுள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணவேண்டுமென்பதில் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கும் நீதி அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத்துக்கும் உண்மையிலேயே ஆர்வமும் அக்கறையும் இருப்பதாகவே தோன்றுகிறது.

இலங்கையின் சாபக்கேடு நாட்டின் நலனைவிட ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதையும் பதவியைப் பிடிப்பதிலுமே தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு ஆர்வமும் அக்கறையும் அதிகம்.

1948 ஆம் ஆண்டில் இலங்கை சுதந்திரம் பெற்றதுடன் உருவான சிங்கள பௌத்த பேரினவாதம் கடந்த சுமார் அரைநூற்றாண்டுக் காலத்தில் பேரழிவுகளை ஏற்படுத்தியும் நாடு இன்னமும் பொருளாதாரத்துறையில் முன்னேற்றம் பெறமுடியாதிருந்தும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் இன்னமும் பாடம் படித்ததாகத் தெரியவில்லை.

அநுரா பண்டாரநாயக்கா போன்ற இளைய தலைமுறையினர்கூட இன்னமும் பழைய வகுப்புவாத சிந்தனையிலேயே அரசியல் பிழைப்பு நடத்த முற்படுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றுகேட்கும் தென்னிலங்கைஅரசியல்வாதிகள் தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள்? என்ற கேள்விக்கு விடைகாண முற்பட வேண்டும். இக்கேள்விக்கு அவர்கள் விடை கண்டால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகண்டுவிட முடியும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டுமென்பதில் தமிழ் மக்களிடையில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

ஆனால் சிங்கள அரசியல்கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமாகத் தங்கள் கருத்தை இன்னமும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

திரு. வாசுதேவநாணயக்காராவின் நவசமசமாஜக்கட்சி மட்டுமே ஆறாவது திருத்தத்தை நீக்க ஆதரவு தெரிவித்திருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகரும் பதில் எதிர்க்கட்சித் தலைவரும் மூன்று நிபந்தனைகள் விதித்திருப்பதுபற்றி நாம் ஏற்கனவே இப்பத்தியில்

# மட்டக்களப்பு மருத்துவமனை

# நோய் குணமாக்கவா; அதிகரிக்கவா?

கிழக்குப் பிராந்திய மட்டக்களப்பு வைத்தியசாலையில் தொடர்ந்து இருந்து நோயைக் குணப்படுத்த முடியரது வெளியேறிய தீரா நோயாளிகள் சிலரும், பொது மக்களும், சில நலன்விரும்பிகளும் கேட்டுக் கொண்டதன் பேரில் உண்மைகளை அறிந்து கொள்வதற்காக நான் சமீபத்தில் அந்த வைத்திய சாலைக்குச் சென்றேன்.

நுழைவாயிலின் முன்பாக உள்ள ஒரு நிழல் மரத்தின் கீழ் பல பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் நிலத்தில் கூட்டமாக இருப்பதைக் கண்டு அவர்களிடம் சென்றேன். 'நீங்கள் மருந்தெடுக்க வந்த நீங்களா? ஏன் இங்கு நிலத்தில் இருக்கிறீர்கள்' எனக் கேட்டேன்.

நாங்கள் வார்ட்டில் இருக்கும் எங்கள் உறவினரைப் பார்க்க வந்திருக்கிறோம் என்றார்கள். ஏன் தங்குமடத்தில் இருக்கலாமே என்றேன். அங்கு வெயில் வெக்கை தாங்கமுடியாது எனக் கூறினார்கள். தங்குமடத்திற்குச் சென்றேன். போகும் வழியிலே மாட்டுச் சாணமும், ஆட்டுப் பிளுக்கைகளும், குப்பை கூளங்களும் கிடப்பதை அவதானித்தேன். சில கிழமைகளுக்குமுன் ஒரு டாக்டர் மாட்டுச்சாணத்தில் சறுக்கி விழுந்து முறிவேற்பட்டதன் பின்புமா இது மாட்டுத் தொழுவமாக இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு வடிகான்களையும், பின்புறச் சுற்றாடலையும் கவனித்தேன். வடிகான்கள் அழுக்குகளாலும், குப்பை கூளங்களாலும் அடைபட்டு நாற்றமெடுக்கும் அடைகான்களாக காட்சி அளித்தன திருவிழா முடிந்து கலைந்த கோவில் வீதிபோல் வைத்திய சாலையின் சுற்றாடல் காணப்பட்டது. வைத்தியசாலையைக் கூட்டிக் கழுவிச் சுத்தம் செய்யும் சுகாதாரச் சிற்றூழியர் பற்றாக்குறைவாக உள்ளதோ என நினைத்தபோது இரண்டு கிழமைகளுக்கு முன்பும், இரண்டு மாதங்களுக்கு முன்பும் வைத்தியசாலை சிற்றூழியருக்கான நேர்முகப் பரீட்சைக்கு பல ஆண்களும், பல பெண்களும் அழைக்கப்பட்டு பிராந்திய சுகாதார பணிப்பாளரின் பணிமனையில் 'மறு அறிவித்தல் வரும் வரையில் நேர்முகப் பரீட்சை பின்போடப்பட்டுள்ளது' என்ற அறிவித்தல் அட்டையைக் கண்டு, வந்தவர்கள் பெரும் ஏமாற்றத்தோடு திரும்பிச் சென்ற செய்திகள் என் நினைவுக்கு வந்தன.

நோயாளர் கூட்டம் நெரிசலாக இருந்தது. இதைப் பார்வையிட்டபின் பெண் நோயாளர் கிளினிக் பிரிவுக்குச் சென்றேன். அங்கு இருந்த இருக்கைகள் நோயாளருக்கு இருப்பதற்குப் போதுமானதாயிருந்தது.

விபத்து வைத்தியப் பிரிவிலுள்ள 10ஆம் 11ஆம் வார்ட்டுகளைப் பார்வையிடச் சென்றேன். வார்ட்டுகளும், நடைபாதைகளும் கூட்டியோ, கழுவியோ சுத்தஞ் செய்யாமல் காணப்பட்டன. நோயாளரின் கட்டில்களிலும், வெற்றுக்கட்டுல்களிலும் நோய்காவிகளான ஈக்கள் கூட்டம் கூட்டமாகவும், கும்பலாகவும் 'நொய்' என்ற ஓசை எழுப்பிக்கொண்டு ஒய்யாரமாக இருந்தன.

தாக இருக்கின்றது. 'லிப்ற்'றுகள் திருத்தப்படவில்லை. கை, முகம் கழுவுவதற்காக உள்ள பேசின்கள் மூடி கழன்றும், திருக்கு ஆணி கழன்றும் ஒரு துளி நீர்கூட வராது பழுதடைந்த நிலையில் இருக்கின்றன.

மழை பெய்தால் உட்கூரை வழியாக வெள்ளமும், ஒழுக்கும் ஏற்படுமாம். நோயாளர் தங்களிடம் முறையிடுவார்களாம். தங்களால்என்னசெய்ய முடியுமென்று தாதியர் என்னிடம் கேட்டார்கள். உணவு, மருந்துகள் ஒழுங்காகக் கிடைப்பதாக சில நோயாளர் கூறினர். உட்சுத்தம், வெளிச் சுத்தமும், நீர், வெளிச்ச வசதிகளும் படுமோசம் என்றார்கள். சில நாட்களாக நீர்வசதி செய்துதரப்பட்டுள்ளதாகவும்,

## மருத்துவமனையின் அவலநிலை பற்றி நமது பிரதிநிதி அலசல்

### வெளி நோயாளர் பகுதியின் நிலை

பின்னர் வெளிநோயாளர் பகுதிக்குச் சென்றேன். மருந்து எடுப்பதற்காக இரண்டு வரிசைகளில் ஆண்களும் பெண்களும் முட்டி மோதிக் கொண்டு நின்றார்கள். அவர்களின் ஒழுங்கைக் கண்காணிப்பதற்கு கண்காணிமார் யாரும் இருந்ததாகத் தெரியவில்லை.

பௌதிக நோயாளர் பிரிவுக்குச் சென்றபோது, இருக்க இடமின்றி நிலத்தில் பலர் இருந்தும், படுத்தும் கிடப்பதைக் கண்டேன். அங்கும்

10ஆம் வார்ட்டின் நடைபாதை மூலையில் கழிக்கப்பட்ட அழுக்கு மெத்தைகள் குவியலாக குவிக்கப்பட்டிருந்தன. ஊத்தை வாளிகள் சுத்தஞ் செய்யப்படாததால் அவை ஈக்கூட்டங்களின் சொகுசான குடியிருப்புகளாக இருந்தன. விபத்து வார்ட்டுகளுக்குச் செல்லும் நடைபாதையில் 12 நோயாளிகள் படுக்க கட்டில் இன்றி பாய் விரிப்பில் படுத்துக்கொண்டிருந்தனர்.

1ஆம், 2ஆம் வார்ட் பக்கம் சென்றேன். 2ஆம் வார்ட் பெண்களுக்குரியது. அங்கு செல்லும்போது நான் மூக்கைப்பொத்திக்கொண்டுதான் சென்றேன். துர்நாற்றமும் ஈக் கும்பலுமாக இருந்தது. அதிலும் படுக்கை இன்றி நடைபாதையில் கிடந்த இரு நீண்ட பெஞ்சுகளில் இரு பெண்கள் படுத்திருந்தனர். எப்படி இதற்குள் இருக்கிறீர்கள் இருக்கும் நோய் மேலும் கூடிவிடுமே என்றேன் நாங்கள் என்ன ஐயா செய்வது? இதைச் சுத்தஞ் செய்கிறார்கள் இல்லையே என்றார்கள்.

முன்பு மலசலம் கழித்து கழுவுவதற்கே நீரின்றி அந்தரப்பட்டதுண்டு என்பதையும் சொல்லி வைத்தார்கள்.

### சத்திரசிகிச்சைப் பிரிவு

இப்பிரிவிற்குப் பொறுப்பான இரு டாக்டர்களைச் சந்தித்து நிலைமைகளை அறிந்தேன். சத்திரசிகிச்சைகளை உயிருக்கு ஆபத்தானவர்களுக்குரிய சிகிச்சை சாதாரண கேணியா, அப்பன்றிசிற்றிஸ் போன்றவைக்கான சிகிச்சை என இரண்டாகப் பிரித்துச் செய்கிறார்களாம்.

சாதாரண சிகிச்சைக்குரியவர்களின் உடல்நிலை, நோய்களின் தன்மைகளுக்கேற்ப 2, 3 மாதங்களுக்குப் பிறகே சத்திரசிகிச்சைக்கான திகதியைக் கொடுக்கிறார்களாம். அவ்வாறு மாதம் பிந்தி அறுவைச் சிகிச்சைக்கு திகதி கொடுக்கப்பட்டவர்கள் குறித்த தினத்தில் சிகிச்சைக்காக வரும்போது துரதிஷ்டவசமாக மின்சாரக்கோளாறு, மயக்கமருந்து இல்லை. மயக்க மருந்து கொடுப்பவர் இல்லை என்ற காரணங்களால் நோயாளி சிகிச்சை பெறாமல் ஏமாற்றம் அடைவதும் உண்டாம். இதனால் மனிதநேயமுள்ள வைத்தியர்கள் சாதாரண அறுவைச் சிகிச்சைகளை உயிருக்கு ஆபத்தான சிகிச்சைகள் என மாற்றி சிகிச்சைகளைச் செய்து அனுப்புவதும் உண்டாம்.

மயக்க மருந்து கொடுப்பவராக மூவரே இருந்தனராம். ஒருவர் இறந்து விட்டாராம். ஒருவர் லீவில் சென்றுவிட்டாராம். இவர்களின் இடம் நிரப்பப்படவில்லை. ஒருவரின் கீழே எல்லா அறுவைச் சிகிச்சைகளும் செய்ய வேண்டி இருக்கிறது. இது எப்படிச் சாத்தியமாகும்? அவருக்கும் சில வசதியீனங்கள் ஏற்படாலாமல்லவா? என்று என்னையே கேட்டனர்.

அறுவைச் சிகிச்சைக்குரிய உபகரணங்கள், கருவிகளில் பல பாவிக்கமுடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளன. இவற்றில் சிலவற்றை நானும் பார்வையிட்டேன். இவற்றிற்குப் புதிய கருவிகள் தரப்படவில்லையா எனக்கேட்டேன். பல தடவைகள் முறையிட்டும், கேட்டும் இதுவரை

(6ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

பகலில் நிகழும் குண்டு வீச்சுக்களுக்கு உங்கள் வீட்டுக் கூரையின் மேல் சிறு தாவாரக் கொடிகளை கூரையை மூடும் வண்ணம் கண்டபடி படர விடுவதனால் மேலிருந்து பார்க்கும் போது வீட்டுத் தோட்டம் போன்ற எண்ணத்தை தோற்றுவிக்கும். இதனால் உங்

## ஊர்சுற்றி

எழுதுவது

கடந்த இருபத்தாறாம் தேதி எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது அதை அப்படியே உங்கள்பார்வைக்கு இங்கு தருகிறேன்.

எங்கள் சமூகத்தில் பெண்களுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும் பெண் விடுதலை பற்றி மேடையிலே பேசிவிட்டு வீட்டிலே மகளையோ தங்கையையோ தாரத்தையோ அடித்து

யும் எனக்கு வாழ்வதற்கு ஆசையில்லை சாகவாவது இந்த விதி என்னை விடுவதாயில்லைஎன்துன்பங்களைச் சொல்லி அழ ஒரு நாதி கூட இல்லை. இறைவனுக்கு ஏன் இந்த ஓர வஞ்சனையோ?

என் மனம் அழுது துடித்துப் புலம்புகிறது அழுது அழுது கண்ணில் நீர்வற்றிப்போய்விட்டது. மனத்தில் புரட்சிப்புயல் வீசிக்கொண்டிருக்கிறது சிறிது காலத்தில் பைத்தியம் பிடித்து விடும் நிலையில் உள்ளது அதற்கு முன்பு இறந்து விடுவது

முற்படுகிறார்கள்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டுமென்றுகேட்கும் தென்னிலங்கைஅரசியல்வாதிகள் தமிழ் இளைஞர்கள் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள்? என்ற கேள்விக்கு விடைகாண முற்பட வேண்டும். இக்கேள்விக்கு அவர்கள் விடை கண்டால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வுகண்டுவிட முடியும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்கவேண்டுமென்பதில் தமிழ் மக்களிடையில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

ஆனால் சிங்கள அரசியல்கட்சிகளும் அரசியல்வாதிகளும் ஆறாவது திருத்தத்தை நீக்குவது சம்பந்தமாகத் தங்கள் கருத்தை இன்னமும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

திரு. வாசுதேவநாணயக்காராவின் நவசமசமாஜக்கட்சி மட்டுமே ஆறாவது திருத்தத்தை நீக்க ஆதரவு தெரிவித்திருக்கிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரமுகரும் பதில் எதிர்க்கட்சித் தலைவருமே மூன்று நிபந்தனைகள் விதித்திருப்பதுபற்றி நாம் ஏற்கனவே இப்பத்தியில் ஆராய்ந்தோம்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கண்டு நாட்டை முன்னேற்றவும் கடந்த அரை நூற்றாண்டு காலமாக தமிழ் பேசும் மக்களுக்கு இழைத்துவந்த கொடுமைகளுக்கு நல்லதொரு முடிவு காணவும் ஒரு பிராயச்சித்தமாக அரசியலமைப்பிலிருந்து ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு சிங்கள அரசியல்வாதிகள் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தையும் தவறவிட்டால் பின்னர் ஒற்றையாட்சி அமைப்புப்பற்றிப் பேச வேண்டிய அவசியமிருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

★ ★ ★

# அணு ஆயுதம் அருகே!

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் யுத்தம் மூளுமா என்ற கேள்வி நின்று இந்தியாவா, பாகிஸ்தானா முதலில் அணு ஆயுதத்தை உபயோகிக்கும் என்ற கேள்வியே இன்று எழுந்துள்ளது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத நடுவில் இந்திய உபகண்டம் இந்தியாவென்றும் பாகிஸ்தானென்றும் இரண்டாகப் பிரிந்து வெள்ளையரிடமிருந்து விடுதலை பெற்றநாளிலேயே பிரிட்டிஷர் உருவாக்கிவிட்டுச் சென்ற காஷ்மீர்ப் பிரச்சினை இன்று உபகண்டத்துக்கு மட்டுமல்ல உலகத்துக்கே அச்சுறுத்தலாக அணு ஆயுதப்போர் மூளுமா என்ற நிலைக்கு வந்து நிற்கிறது.

காஷ்மீர் பிரச்சினைக்கு சிம்லா ஒப்பந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று வெளிநாட்டுத் தலைவர்கள் மட்டுமல்ல இந்திய பாகிஸ்தான் பிரதமர்களுமே அடிக்கடி கூறிவருகிறார்கள்.

அதேசமயம் இருநாடுகளும் தமது எல்லைகளில் படைகளைக் குவித்து வருகின்றன. பாகிஸ்தான் எல்லையில் படைகளைக் குவிக்கின்றதென்று இந்தியாவும் இந்திய எல்லையில் படைகளைக் குவிப்பதாகப் பாகிஸ்தானும் பரஸ்பரம் குற்றம் சாட்டி இருதரப்பும் மோதுவதற்குத் தயாராகப் படைகளைக் குவித்து வைத்திருக்கின்றன.

இதேபோல் பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாக இந்தியாவும் இந்தியா அணு ஆயுத உற்பத்தி செய்வதாக பாகிஸ்தானும் பரஸ்பரம் குற்றம் சாட்டி வந்துள்ளன.

இப்பொழுது இந்தியாவிடமும் பாகிஸ்தானிடமும் அணு ஆயுதங்கள் இருப்பதும் அவை அணு ஆயுதப் போருக்குத் தயாராகிவிட்டதும் உறுதியாகிவிட்டது.

செய்மதி மூலம் இரண்டு நாடுகளும் அணு ஆயுத யுத்தத்துக்கு ஆயத்தப்படுவது உளவுப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இரு நாடுகளுமே இதற்குக் காரணமாக இருந்த அமெரிக்க சோவியத் வல்லரசுகள் இந்திய உபகண்டம் அழிந்துவிடுமெனக் கவலை தெரிவித்துள்ளன.

அணு ஆயுத யுத்தம் வந்தால் பஸ்மாசுரன் கதைமாதிரி இந்தியாவும் பாகிஸ்தானுமே அழிந்துபோவது நிச்சயம். அதேசமயம் ஆசியாவும் முழு உலகமுமே பெரிதும் பாதிக்கப்படும். பல வருடங்களுக்கு இது நீடிக்கும்.

இந்த நிலை ஏற்படாமல் தடுக்க வேண்டும். யார் செய்வார்; யார் சொல்வார்; யார் கேட்பார்?

---

கான்கள் அழுக்குகளாலும், குப்பை கூளங்களாலும் அடைபட்டு நாற்றமெடுக்கும் அடைகான்களாக காட்சி அளித்தன திருவிழா முடிந்து கலைந்த கோவில் வீதிபோல் வைத்திய வில்லை.

பௌதிக நோயாளர் பிரிவுக்குச் சென்றபோது, இருக்க இடமின்றி நிலத்தில் பலர் இருந்தும், படுத்தும் கிடப்பதைக் கண்டேன். அங்கும் ... படுத்துக்கொண்டிருந்தனர்.

1ஆம், 2ஆம் வார்ட் பக்கம் சென்றேன். 2ஆம் வார்ட் பெண்களுக்குரியது. அங்கு செல்லும்போது நான் மூக்கைப்பொத்திக்கொண்டுதான் சென்றேன். துர்நாற்றமும் ஈக் கும்பலுமாக இருந்தது. அதிலும் படுக்கை இன்றி நடைபாதையில் கிடந்த இரு நீண்ட பெஞ்சுகளில் இரு பெண்கள் படுத்திருந்தனர். எப்படி இதற்குள் இருக்கிறீர்கள் இருக்கும் நோய் மேலும் கூடிவிடுமே என்றேன் நாங்கள் என்ன ஐயா செய்வது? இதைச் சுத்தஞ் செய்கிறார்கள் இல்லையே என்றார்கள்.

## மலசலகூடங்களில் ஒன்றுமட்டுமே பாவனை

வார்ட்டுகளின் பின்னால் 6, 7 மலசலகூடங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் பாவிக்சக்கூடியதாக இருக்கிறது. அதை அதிகமாக வயிற்றோட்ட நோயாளர் பாவிக்கிறார்களாம். அவர்கள் பாவித்தபின் சூாநோய் போன்ற நோயாளர்கள் அதைப் பாவிக்கவேண்டி இருக்கிறதாம். இதனால் வயிற்றோட்ட நோய் எல்லோருக்கும் பரவ வேண்டிய நிலை ஏற்படுமல்லவா! என நல்ல இதயமுள்ள ஒரு தாதி என்னிடம் கூறினார்.

மாடிக்கட்டிடங்களை வைத்தியசாலையில் கட்டி இருக்கிறார்கள். நோயாளிகளை அவசிய சிகிச்சைகளுக்காக கீழ்மாடியில் இருந்து மேல் மாடிக்குக் கொண்டு செல்ல முடியாது இருக்கிறதே என ஒருடாக்டரே வேதனையோடு அங்கலாய்த்துக் கொண்டார். ஏனெனில் வைத்தியசாலையில் உள்ள 'லிப்ற்' எல்லாம் பழுதடைந்துள்ளனவாம். வருடக் கணக்காக அவை திருத்தப்படவோ, திருத்துவதற்கு முயற்சி எடுக்கப்படவோ இல்லையாம்.

22ஆம் 21ஆம் 5ஆம் வார்ட்டுகளையும் பார்வையிட்டேன். அவைகள் கூட்டிக் கழுவிச் சுத்தமாக இருந்தன ஆனால் வார்ட்டுகளில் தொற்றுநீக்கி மருந்துகள் எதுவும் தெளிக்கப்படவில்லை. முன்பெல்லாம் வைத்தியசாலைக்குச் சென்றால் இம்மருந்துகளின் மணமே மூக்கில் படும். இச்சுத்திகரிப்பு ஒழுங்கு இல்லாது போனதால் தான் ஈக்கள் நோயாளரின் படுக்கைகளை ஆக்கிரமிக்கத் தொடங்கி உள்ளன.

35 இலட்சம் ரூபா செலவில் வைத்தியசாலையின் திருத்த வேலைகள் நடைபெறுவதாகக் கூறுகிறார்கள். வேண்டிய விடத்து காற்றாடிகளோ, மின்குமிழ்களோ இல்லை. வார்ட்டுகளுக்குத் தனித்தனியே இருக்கும் மலசலகூடங்களில் ஒன்று, இரண்டுதான் பாவிக்கக்கூடிய

---

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

பகலில் நிகழும் குண்டு வீச்சுக்களுக்கு உங்கள் வீட்டுக் கூரையின் மேல் சிறு தாவாரக் கொடிகளை கூரையை மூடும் வண்ணம் கண்டபடி படர விடுவதனால் மேலிருந்து பார்க்கும் போது வீட்டுத் தோட்டம் போன்ற எண்ணத்தை தோற்றுவிக்கும். இதனால் உங்கள் வீடுகளில் உண்டாகும் பாதிப்பு குறையலாம். உங்களது வீடுகளுக்கு அருகில் ஏதேனும் பாழடைந்த அல்லது பயன் படுத்த முடியாத கட்டிடங்கள் இருப்பின் அவற்றினை குண்டு வீச்சினால் தாக்கப்பட்டதைப் போல் இடித்து விடுவதாலோ, அல்லது ஏற்கனவே குண்டு வீச்சினால் தாக்கப்பட்ட கட்டிடம் ஒன்றாயின், அதன் இடிவுற்ற பகுதிகளை அகற்றி சுத்தம் செய்யும் முயற்சியில் ஈடுபடாது அப்படியே விடுவதன் மூலமோ உங்கள் பகுதியில் மேலும் குண்டு வீச்சு நிகழாமல் தடுக்கலாம்.

இதுவரை குண்டு வீச்சுக்கெதிராக பாதுகாப்பு நடவடிக்கைகளை பற்றி அறிந்து நீங்கள் அவற்றினை அலட்சியம் செய்யாது செயற்படுத்த முனைவீர்களேயாயின், சிறீலங்கா அரச படையினரின் இன ஒழிப்பு நடவடிக்கைகளை முறியடிப்பதோடு உங்களையும் காப்பாற்றிக் கொண்டவர்களாவீர்கள்.

இதில் கண்ட எந்த ஒரு விடயம் பற்றிய விளக்கமோ அல்லது மேலதிக விபரமோ உங்களுக்குத் தேவைப்படுமாயின், உங்கள் பகுதியில் உள்ள 'தமிழீழ விடுதலைப் புலிகளின்' முழு நேர உறுப்பினரொருவருடன் தொடர்பு கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு உதவுவதோடு இதிற் கண்ட செயற்பாடுகளை மேற் கொள்வதற்கு வேண்டிய உதவிகளை புரிவார்.

(முற்றும்)

---

# கிளிநொச்சி ஜெயபுர பாடசாலையின் குறைபாடுகள்

## மக்கள் மடல்

ஆசிரியர்
ஈழநாதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஜெயபுர கிராமத்தில் அமைந்துள்ள அரசாங்கபாடசாலை 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் கிளிநொச்சி கல்விக்காரியாலயத்தால்பொறுப்பேற்கப்பட்டது. அதற்குமுன் சர்வோதய இப்பாடசாலையை நடாத்தி வந்தது.

587 குடும்பங்களை கொண்டுள்ளஇக்கிராமத்தில் அமைந்துள்ள ஆரம்பப் பாடசாலை இதுவாகும் இப்பாடசாலையில் சுமார் 460 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். பயிலுனர் ஆசிரியர்கள் இருவரோடு சேர்த்து ஐந்து ஆசிரியர்களும் தொண்டர்ஆசிரியர் கள்மூன்று பேரும் மொத்தம் எட்டு ஆசிரியர்கள் கற்பிக்கின்றனர். ஆனால் மாணவர்கள் இருந்து படிப்பதற்கு கட்டிடமோ ஆகச்சிறியதாகும். பாடசாலைக்காகஒதுக்கப்பட்டகாணியில் இதுவரை கட்டிடவேலை எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை. சுமார் 200 மாணவர் நிலத்தில் இருந்து கல்விகற்க வேண்டியுள்ளது. மாணவர்களின் பி. அ. பத்திரம் பாடசாலை சம்பவ திரட்டு புத்தகம் வைப்பதற்குக்கூட சிறிய அலுமாரி கூட இல்லை. புதிதாக அரசாங்கம்கையேற்கும் பாடசாலைகளில் அனேகமாக காரியாலயம் சகல ஆவணங்களையும் உபகரணங்களையும் ஒதுக்கி வருவதும் தெரிந்ததே. எனவே இப்பாடசாலைக்கு தேவையானவற்றை சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகள் கவனம் செலுத்தி பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

செ. இராமநாதன்
ஜெயபுரம்

---

# ஊர்சுற்றி

## எழுதுவது

கடந்த இருபத்தாறாம் தேதி எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது அதை அப்படியே உங்கள்பார்வைக்கு இங்கு தருகிறேன்.

எங்கள் சமூகத்தில் பெண்களுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கும் பெண் விடுதலை பற்றி மேடையிலே பேசிவிட்டு வீட்டிலே மகளையோ தங்கையையோ தாரத்தையோ அடித்து உதைத்து ஒதுக்கும் ஆண் வர்க்கத்தினரைப் பற்றி எடுத்துச்சொல்ல எனக்கு மணித்துளிகள் போதா.

இக்கடிதம் உங்கள் கைகளில் கிடைக்கும் நேரம் நான் உயிரோடு இருப்பேனோ என்பது சந்தேகம் தான்.

காரணம் நானும் ஒரு வகையில்வஞ்சிசகப்பட்டு ஒடுக்கப்பட்டு இதயத்தில் அடிமேல் அடிவாங்கியவள் என் துன்பங்கள் சொல்லி முடியாதவை என்னைப்போல் இன்னும் ஒரு பெண் இந்தச் சமுதாயத்தில் தோன்றாமல் பார்த்துக் கொள்ள இந்தக் கடிதம் மூலம் உதவி செய்ய வேண்டுகிறேன்.

என் வாழ்வில் நான்துன்பங்களை அடுக்காகச் சந்திப்பதற்குக்காரணம்என் பெற்றோர் தான் நான் இன்று சாக முயற்சிப்பதற்கு காரணம் கூட என் பெற்றோர் தான்.

சந்தேகம் என்பது எவ்வளவு கொடிய நோய் என்பதை நான்என் வாழ்வில் அதிகமாக அனுபவித்தவள் என் தந்தை சிலகாலங்களாக குடிபோதைக்கு உள்ளாகி இருக்கின்றார் எதற்கெடுத்தாலும் குற்றமும் குறையும் சொல்கின்றார் என்னை வீட்டிலேயே சிறை வைத்துள்ளார். நான் யாரோடும் அதிகமாக பழகக் கூடாதாம். என்ன கொடுமை.

என் அண்ணனுடன்கூடவா நான் கதைக்கக் கூடாது வாயிருந்தும் ஊமைசெவியிருந்தும் செவிடு கண்ணிருந்தும் குருடு எத்தனை காலத்திற்குத் தான் நான்கு சுவரே என்னுடைய வேலியாக இருக்க முடியும் எனக்கென்று ஆசைகள் இருக்கக்கூடாதா? என் துன்பங்களே எனது இன்பமாக எத்தனை காலம் தான் நான் வாழ முடியும் எனக்கு வாழ்வதற்கு ஆசையில்லை சாகவாவது இந்த விதி என்னை விடுவதாயில்லைஎன்துன்பங்களைச் சொல்லி அழ ஒரு நாதி கூட இல்லை. இறைவனுக்கு ஏன் இந்த ஓர வஞ்சனையோ?

என் மனம் அழுது துடித்துப் புலம்புகிறது அழுது அழுது கண்ணில் நீர்வற்றிப்போய்விட்டது. மனத்தில் புரட்சிப்புயல் வீசிக் கொண்டிருக்கிறது சிறிது காலத்தில் பைத்தியம் பிடித்து விடும் நிலையில் உள்ளது அதற்கு முன்பு இறந்து விடுவது என்று முடிவு செய்து செய்துள்ளேன்.

வாழும்போது கோழையாக வாழ்ந்தேன் இறந்த பின்னாவது என் அறிவுரை பிறருக்கும் பயன் படட்டும்.

அன்புள்ள பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளை அடக்காதீர்கள். ஒடுக்காதீர்கள் கட்டுப்படுத்தாதீர்கள் என்வாழ்வில் எனக்கு ஏற்பட்ட இந்த முடிவை உங்கள் செல்வங்களுக்குஏற்படுத்தாதீர்கள் அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதனால் மனநோய் விரைவில் ஏற்படும் என்அனுபவரீதியான அணுகுமுறைகளைக் கூறுகிறேன் தயவு செய்து அன்பாக நடந்து கொள்ளுங்கள். ஆத்திரத்தைபிள்ளைகள் மீது சொரியாதீர்கள்.

என்முடிவை கோழைத்தனம் என்று கூறினால் அதற்காக வருத்தப்படப் போவதில்லை காரணம் இனி நான் வாழ்ந்து துன்பங்கள் வந்தால் அதைத்தாங்கும் சக்தி என் இதயத்திற்கில்லை.

மீண்டும் மீண்டும் கூறிக் கொள்வது என்னவென்றால் பிள்ளைகளை அன்போடு நடத்துங்கள். அவர்களுடன் அன்பு கொண்டு பாசத்துடன் உறவாடுங்கள்.

என் சாவினால் இந்த சமூகம் திருத்தவேண்டும் அதுவே என்இறுதிஆசை

நன்றி
அபாக்கியசாலி

★

இந்தக்கடிதம் கிடைத்து நான்கு நாட்களாகிவிட்டன. இந்தப் பெண் இன்னும் உயிருடனிருப்பாரென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தனது பெயரையும் முகவரியையும் எனக்குத் தெரிவித்தால் அந்தப் பெண்ணின் துன்பத்தை நீங்குவதற்கு ஏதாவது வழி பார்க்கலாம்.

Registered as a News Paper at the G. P. O.

ஈழநாதம்

### கண்காட்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள ஆரம்ப வகுப்பு மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை வெளிக்காட்டும் வகையில் நெடுந்தீவு கொத்தணிப் பாடசாலைகள் ஒன்றிணைந்து கண்காட்சி ஒன்றினை நடாத்த ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

# பெண்கள் தொழில் நுட்ப அறிவு பெறும் வாய்ப்பு உருவாக வேண்டும்

(யாழ்ப்பாணம்)

தொழிற்றுறையில் பெண்களுக்கு நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும், பாரபட்சங்களையும் நீக்கும் முகமாக அதற்கு அடிப்படையான இயந்திரவியல், தொழில் நுட்பவியல் சார்ந்த அறிவுகளைப் பெண்கள் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்கவேண்டும் இவ்வாறு நேற்று யாழ். வின்ஸர் திரையரங்கில் நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் முன்னணியினரின் இறுதி நாள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட வேலைத்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது

சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்ட அறிக்கை வருமாறு:

1. மகளிர் அமைப்பிற்கான கட்டமைப்புகளை உடனடியாக உருவாக்குதல்.
2. பாதிக்கப்பட்ட பெண்களுக்கான, பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுதல்.
3. ஆரம்ப சுகாதார நிலையங்கள்சிறுவர்பராமரிப்புநிலையங்கள், சிறுவர் நூல்நிலையங்கள் சிறுவர் பாடசாலைகள் என்பவற்றை அமைத்தல்.
4. பால் வேறுபாடு ரீதியில் தொழிற்றுறையில் பெண்களுக்குப் பாரபட்சம் காட்டப்படுவதை நீக்குமுகமாக தொழிற்றுறையில் பெண்களுக்கு நிலவும் ஏற்றத்தாழ்வுகளையும், பாரபட்சங்களையும் நீக்கும் முகமாக அதற்கு அடிப்படையான இயந்திரவியல்,தொழில் நுட்பவியல் சார்ந்த அறிவுகளைப் பெண்கள் பெறுவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.
5. கலாசார ரீதியாகவும், பெண்களுக்கெதிராக காணப்படும் ஒடுக்குமுறை வடிவங்கள் பற்றிய முழுமையான ஆய்வொன்றினை மேற்கொள்வதன் மூலம் தீர்வுக்கான வழிவகைகளை ஆராய்தல்.

மகளிர் முன்னணியின் செயலாளர் சுந்தரி தலைமையில் நடந்த இம்மாநாட்டில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராஜா, முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், மகளிர் முன்னணிப் பிரதம அமைப்பாளர் ஜெயா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சர்வதேசரீதியில்சிறந்த கட்டுக்கோப்பான பெண்களின் விடுதலை இயக்கம் இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது (மு)

## காணிப்பதிவு அலுவலகத்திற்கு கட்டிடம் அமைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மவட்டக் காணிப் பதிவு அலுவலகத்திற்கும் மாவட்டப் பதிவாளர் காரியாலயத்திற்கும் என புதிய மூன்று மாடிக் கட்டிடம் ஒன்று அமைத்துத் தரும்படி புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இக் கட்டிடத்திற்கு என 43 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா மதிப்பீடுசெய்யப்பட்டுப் புனர்வாழ்வு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயம் பற்றி எதுவித அறிவித்தலும் இதுவரைகிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்விரு அலுவலகங்களும் வன்செயல்கள் தொடங்கும் காலத்தில் யாழ். மாவட்ட நீதிமன்ற வளாகத்திற்குள் இருந்தது. பின்பு இலங்கை இராணுவ தாக்குதல்களால் யாழ்ப்பாணம் பழைய பூங்காவிற்கு மாற்றப்பட்டிருந்தது தொடர்ந்து ஏற்பட்ட இந்திய இராணுவ தாக்குதலால் அங்கிருந்து குடிபெயர்ந்து 1988 ஆம்ஆண்டு தைமாதம்தொடக்கம் யாழ். நக்கா வீதியிலுள்ள இரண்டு தனியார் வீடுகளில் தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## தமிழ் அதிகாரிகளால் தமிழருக்குசிங்களக் கடிதம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள தமிழ் ஊழியர்களுக்குதனிச்சிங்களத்தில் கடிதங்களும், படிவங்களும் அனுப்பப்படுகின்றன.

இங்கு கடமை புரியும் உயர் அதிகாரிகளும் நிர்வாக உத்தியோகத்தர்களும் தமிழர்களாக இருந்தும் இவ்வாறுசிங்களத்தில் கடிதங்களை அனுப்பி வருகின்றனர்.

இது குறித்து தாம் பல தடவை முறையிட்டும் தமிழர்களே சிங்களத்தில் கடிதம் அனுப்புவதாக இவர்கள் கவலை தெரிவித்தனர்.

வடக்கு-கிழக்கு மாகாணசபை

## காசோலைகளுக்கு இல.வங்கி உடன் பணம் வழங்க மறுப்பு

(மட்டக்களப்பு)

வட -கிழக்கு மாகாணசபையினால் அனுப்பிவைக்கப்படும் காசோலைகளுக்கு உடனடியாக பணம் வழங்க இலங்கை வங்கி மறுத்துள்ளது.

மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சு மாநகரசபை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான சம்பளக் காசோலையை அனுப்பிவைத்தது.

மாநகரசபையினர் அரச காசோலை என்பதால் உடனடியாக நம்பிக்கையின் பிரகாரம் பணம் பெற முயன்றனர்.

ஆனால் வங்கி மறுத்துவிட்டது'

கொள்வனவு செய்யப்படும் காசோலையை அனுப்பிவைக்கப்பட்டு திரும்பிய பின்புதான் பணம் தரப்படும் என தெரி

### கனடா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாக இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இவர் வடமராட்சி பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்




சர்வகட்சி மகாநாட்டில்

## அடிப்படை உரிமைகள் பற்றி திட்டம் தயாரிக்க குழு

சர்வ கட்சி மகாநாடு ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது மேற்படி மகாநாட்டில், பிரதிநிதிகள் அடிப்படை உரிமைகள் தொடர்பாகத் தமக்கிடையில் இணங்கிக் கொண்டதற்கிணங்க திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் ரஞ்சன் விஜயரட்ணா, கலாநிதி நீலன் திருச்செல்வம், கலாநிதி அமரதுங்கா, கலாநிதி காமினி விஜயசேகரா, எம். எச்.எம், அஸ்ரவ், பி. பி, தேவராஜ் மேதிலால் நேரு ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். ஜனாதிபதி பிரேமதாசா தலைமை வகிக்கும் சர்வகட்சி மகாநாடு நேற்றுக் கொழும்பில் கூடியது,

### இறக்குமதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மில்ச்சாட்அரிசி பச்சைஅரிசி போன்ற இறக்குமதி செய்யப்பட்ட அரிசிவகைகள்உணவுத் திணைக்களக் களஞ்சியங்களில் இருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு ஒருகிலோ 11ரூபா75சதத்திற்கும் மொத்தவிற்பனைக்கு11 ரூபா90சதத்திற்கும் வழங்குவதற்கு விலை

ஒட்டுசுட்டான்

## உ.அ. அதிபர் அலுவலகத்திற்கு மக்கள் செல்வதில் சிரமம்

(நெடுங்கேணி)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சில பகுதி மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரிய குளம் ஒதிய மலை, தண்டுவான், பழம்பாசி, அலைக் கல்லுப்போட்டகுளம் கரடிப்பிலவு ஆகியஇடங்களில் வசிக்கும் மக்களே இவ்வாறு செல்ல கஷ்டப்பட வேண்டியுள்ளது.

முன்னர் இவர்கள் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சென்று வந்தனர்.

தற்போது இந்தப்புதிய அலுவலகம் இவர்களின் இடத்திலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ளதுடன் சீரான பஸ் சேவையும் இல்லாத தாலேயேஇவ்வாறு கஷ்டப்பட வேண்டியுள்ளது.

இப்பகுதி வீதிச்சீர் கேட்டால் இங்கு பஸ் சேவையை நடாத்த முடியாதிருப்பதாக இ.போ.ச அதிகாரிகள் கூறுகின்றனர். (30)

வாழ்வு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவ்விடயம் பற்றி எதுவித அறிவித்தலும் இதுவரைகிடைக்கவில்லை என்பது குறிப் ஆம் ஆண்டு தைமாதம் தொடக்கம் யாழ். நக்கா வீதியிலுள்ள இரண்டு தனியார் வீடுகளில் தற்போது இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். (அ)

## தமிழ் அதிகாரிகளால் தமிழருக்குசிங்களக் கடிதம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை கடற்படைத் தளத்தில் உள்ள தமிழ் ஊழியர்களுக்குதனிச்சிங்களத்தில் கடிதங்களும், படிவங்களும் அனுப்பப்படுகின்றன.

இங்கு கடமை புரியும் உயர் அதிகாரிகளும் நிர்வாக உத்தியோகத்தர்களும் தமிழர்களாக இருந்தும் இவ்வாறுசிங்களத்தில் கடிதங்களை அனுப்பி வருகின்றனர்.

இது குறித்து தாம் பல தடவை முறையிட்டும் தமிழர்களே சிங்களத்தில் கடிதம் அனுப்புவதாக இவர்கள் கவலை தெரிவித்தனர்.

## யாழ்ப்பாணப் பெண் தடுப்புக் காவலில்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப்பெண்(வயது33) கடந்த சனியன்று கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தைச் சேர்ந்த பாதுகாப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவர்வசம்நான்குபோலியானகடவுச்சீட்டுக்களும்.சனியன்றுஇரவு விமானமார்க்கமாக சிங்கப்பூர் செல்வதற்கான குடியகல்வுத் திணைக்களத்தின் வெளியேற்ற முத்திரைகுத்தப்பட்டகடவுச்சீட்டும் இருந்ததாகக் காணப்பட்டன. இவருடையகடவுச் சீட்டில் போலியானமலேசியாவிசா முத்திரையும் இடப்பட்டிருந்ததாம்.

இதே வேளை 65வயதான சி.பொன்னுத்துரை என்பவர், 6 தங்கக் கட்டிகளுடனும் காலில் சுற்றியிருந்த 7தங்கச் சங்கிலிகளுடனும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மினிவான் - சாலி விபத்து

(கரவெட்டி)

கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் நிகழ்ந்த மினிவான், சாலி விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் இவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விபத்தில் படுகாயமடைந்தோர் துன்னாலையை சேர்ந்த செல்லன் செல்வராசா (வயது 34), குழந்தைவேலு குணசேகரம் (18) என்பவராவர்.

## அம்பாறை மாவட்டத்தில் பாடசாலைகளின் அவலம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் தமிழ் எல்லைக் கிராமங்களான மல்வத்தை, வளர்த்தாப்பிட்டி ஆகிய கிராமங்களில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளால் இப்பிரதேச மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டிடங்கள் மிகப் பழமை வாய்ந்தவையாகும். தளபாடக் குறைவும் இங்கு நிறைய உண்டு. மாணவர்கள் இவ்வாறான குறைபாடுகளால் மர நிழல்களிலிருந்தும், தரையிலிருந்தும் கல்வி கற்று வருகின்றனர்.

மற்றும் குடி தண்ணீர் வசதிகளோ, மலசல கூட வசதிகளோ, இங்கு இன்றி மாணவர்கள் அயல் வீடுகளுக்கு செல்கின்றனர்.

இவ்வாறான குறைபாடுகளால் பாதிக்கப்பட்டு வரும் மாணவர்களின் நலன் கருதி எந்த அரசியல் வாதிகளோ, கல்வித்திணைக்களமோ எக்காலத்திலும் கவனமெடுக்கவில்லையென இப்பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்கள் கூறுகின்றனர்.

தற்போது இப்பிரதேசங்களின் விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் திரு. நிதி இப்பாடசாலைகளைச் சென்று பார்வையிட்டதைத் தொடர்ந்து, இவைகளைப் புனரமைக்க பொது மக்களின் உதவிகளை நாடியுள்ளதாக ஈழநாதம் நிருபருக்கு தெரிவித்தார். (48)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## காசோலைகளுக்கு இல.வங்கி உடன் பணம் வழங்க மறுப்பு

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணசபையினால் அனுப்பிவைக்கப்படும் காசோலைகளுக்கு உடனடியாக பணம் வழங்க இலங்கை வங்கி மறுத்துள்ளது.

மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சு மாநகரசபை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான சம்பளக் காசோலையை அனுப்பிவைத்தது.

மாநகரசபையினர் அரச காசோலை என்பதால் உடனடியாக நம்பிக்கையின் பிரகாரம் பணம் பெற முயன்றனர்.

ஆனால் வங்கி மறுத்துவிட்டது.

கொள்வனவு செய்யப்படும் காசோலையை அனுப்பிவைக்கப்பட்டு திரும்பிய பின்புதான் பணம் தரப்படும் என தெரிவிக்கப்பட்டதாம். (37)

### கனடா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலமாக இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இவர் வடமராட்சி பகுதியைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பு

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவில்லை எனக் கூறினர். பிரித்தானியா போன்ற வெளிநாடுகள் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வைத்திய உபகரணங்களை நன்கொடையாக வழங்கி இருக்கின்றனவே, ஏன் உங்களுக்குக் கிடைக்கவில்லை என்றேன். அதுதான் எங்களுக்கும் புரியவில்லை என்றார்கள்.

பிரான்ஸ் தேசத்தில் வைத்தியத்துறையில் ஒவ்வொரு பிரிவிலும் கைதேர்ந்த வைத்தியக் குழுவினர் இங்குவந்து கைமாறு கருதாது சேவையாற்றும் போது இங்கு நடந்த வேதனைக்குரிய வெட்கப்படக்கூடிய சில சம்பவங்களையும் கூறினார்கள். அவசர சிகிச்சைகளுக்காக அவர்களுக்குச் செய்தி அனுப்பினால் என்னதான் வேலை இருந்தாலும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உடனடியாக வந்து சேர்வார்களாம். நம் நாட்டிற்காக நம் இனத்திற்காக தெய்வீகத் தொண்டாகக் கருதும் வைத்தியத் தொழிலைச் செய்யும் நம்மவர்கள் பிரஞ்சு நாட்டு வைத்தியர்களையும் காக்கப் பண்ணி காலங்கடந்து கடமை உணர்ச்சி இன்றி வந்து சேர்வார்களாம். பேரினத்தால் திட்டமிட்டு தட்டிப் பணிக்கப்படும் நம் இனம் நம் இனத்தவர்களாலே புறக்கணிக்கப்படும் போது எப்படித் தலை நிமிர்ந்து தன்மானத்தோடு வாழமுடியும்?

இன உணர்வோடும் கடமை உணர்வோடும் செயல்பட்டு வரும் டாக்டர் தங்கவடிவேலையும், டாக்டர் விவேகானந்தராசாவையும் பலரும் பாராட்டினார்கள். மட்டக்களப்பு வைத்தியசாலையின் சீர்கேடுகளை நீக்கி சிறப்பாக இயங்கப் பண்ணுவதற்குரிய பொறுப்பானவர்கள் யார்? இனிமேலாவது பொறுப்புணர்வோடு செயல்படுவார்களா?

மு. கணேசதுரை

### பிரேமா - புலிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாகவும், நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையினைப் போக்கி பேச்சுவார்த்தையை நட்புறவுச் சூழ்நிலையில் தொடர்வது பற்றியும் பேசப்படலாம் எனத் தெரிகின்றது.

மேலும் தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்த குழுக்களுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதை உடன் தவிர்ப்பதுடன் புலிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து பேச்சுவார்த்தைகளை நடத்துவது, தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிறுத்தப்பட்ட புனருத்தாரண வேலைத் திட்டங்களை துரிதமாக வழங்க நடவடிக்கை எடுத்தல்போன்ற விடயங்கள் இப் பேச்சு வார்த்தையின் போது முக்கியமாக விவாதிக்கப் படலாம்எனத் தெரிய வருகின்றது (அ)

### நெல்மூட்டைகள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

நெல் மூடைகளும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன லொறி கல்முனைக்குச் சென்றது. (46)

### பதின்நான்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பணம் செலுத்தி மூன்று மாதங்களாகியும் இதுவரை எதுவும் கவனிக்கப்படவில்லை.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்ட போது இதற்குரிய மின் உபகரணங்கள் கொழும்பில் இருந்து வரவேண்டும் என்று கூறுகின்றனர்.

அதே சமயம் சில குறிப்பிட்டோருக்கு 'செல்வாக்கின்' நிமிர்த்தம் மின்சாரம் வழங்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (46)

டம் ஒன்றைத் தயாரிப்பதற்குக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக் குழுவில் ரஞ்சன் விஜயரட்ணா, கலாநிதி நீலன் திருச்செல்வம், கலாநிதி அமரதுங்கா, கலாநிதி காமினி

### இறக்குமதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மில்ச்சாட்அரிசி பச்சைஅரிசி போன்ற இறக்குமதி செய்யப்பட்ட அரிசிவகைகள்உணவுத் திணைக்களக் களஞ்சியங்களில் இருந்து கூட்டுறவு சங்கங்களுக்கு ஒருகிலோ 11ரூபா75சதத்திற்கும் மொத்தவிற்பனைக்கு11 ரூபா90சதத்திற்கும் வழங்குவதற்கு விலை நிர்ணயிக்கப் பட்டுள்ளது

இவ் அரிசி வகைகளின் சில்லறை விலை கூட்டுறவு ஆணையாளரினால் பின்பு அறிவிக்கப்படும் எனவும் அவ் உணவு கட்டுப்பாட்டதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

### மகளிர் முன்னணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக நிறுத்தப்படல் வேண்டும்

8. ஒரு இலட்சம் மலையகம் வாழ் தமிழ் மக்கள் நாடுகடத்தப்படும் திட்டம் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் அவர்கள் இலங்கையின் குடிமக்கள் என ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

9. மாகாணசபை உடனடியாகக் கலைக்கப்பட்டு 6வது திருத்தச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும்.

இத்தீர்மானங்கள் மேற்படி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

இம்மாநாட்டில் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மகளிர்முன்னணி உறுப்பினர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (மு)

### கொழும்பில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து உங்கள் வீடுகளில் வைத்தால் எங்களுக்கு உடன் அறிவிக்க வேண்டுமென பொலிஸார்எச்சரித்துவிட்டுச் சென்றனர்.

### நிவாரணத்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு பேசினார்.

இப்பகுதியில் அண்மைக் காலமாக இடம்பெற்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறும் கூறினார்.

### மீன் பிடிக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற சமயத்தில் வாவிக்குள் இவற்றை வீசிவிட்டுக் காட்டுக்குள் தப்பியோடிய போராளிகள் இதைச் செய்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## உ.அ. அதிபர் அலுவலகத்திற்கு மக்கள் செல்வதில் சிரமம்

(நெடுங்கேணி)

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சில பகுதி மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரிய குளம் ஓதிய மலை, தண்டுவான், பழம்பாசி, அலைக் கல்லுப்போட்டகுளம் கரடிப்பிலவு ஆகியஇடங்களில் வசிக்கும் மக்களே இவ்வாறு செல்ல கஷ்டப்பட வேண்டியுள்ளது.

முன்னர் இவர்கள் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு சென்று வந்தனர்.

தற்போது இந்தப்புதிய அலுவலகம் இவர்களின் இடத்திலிருந்து பத்துமைல் தூரத்தில் உள்ளதுடன் சீரான பஸ் சேவையும் இல்லாததாலேயேஇவ்வாறு கஷ்டப்பட வேண்டியுள்ளது.

இப்பகுதி வீதிச்சீர் கேட்டால் இங்கு பஸ் சேவையை நடாத்த முடியாதிருப்பதாக இ.போ.ச அதிகாரிகள் கூறுகின்றனர். (30)

## டாக்டர் நியமனத்தில் அரசினர் ஆஸ்பத்திரிகள் ஸ்தம்பிக்கலாம்

நாளை வியாழக் கிழமை தென்பகுதி ஆஸ்பத்திரிகள் ஸ்தம்பித நிலையை அடையலாம் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கிறன.

வழமையான நெறி முறைகளுக்கு மாறாக அரசியல் செல்வாக்கின் நிமித்தம் வைத்திய அதிகாரியாக கீதாஞ்சலி மெண்டிஸ் என்பவர் நியமனம் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாக உள்ளது எனத் தெரிகின்றது. இவரது நியமனம் தொடர்பாக பொது வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசிற்கு தமது ஆட்சேபத்தை தெரிவித்ததோடு அவரை பதவி நீக்கம் செய்யாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதற்காக வியாழக் கிழமை வரை அரசிற்குக் கால அவகாசம் கொடுத்துள்ளதாகவும் தெரியவருகின்றது

## யாழ். பல்க. மறுமலர்ச்சி கழகம் வீதி செப்பனிட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் யாழ்-சுண்டிக்குளம் பகுதி ஆறுமைல் நீளமான சேதமடைந்த வீதியை செப்பனிடுவதில் தற்போது ஈடுபட்டு வருகின்றது. இவ் வேலைத்திட்டம் சிரமதானம் மூலமாகவே யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் மேற் கொள்ளப் பட்டுள்ளது.

இவ் வீதியமைப்பில் இன்று யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் ஆங்கிலம் பயிலும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற புதிய மாணவர்களும் இணைந்துகொள்கின்றார்கள்

இவர்கள் தொடர்ந்து ஒரு வாரம் அப்பகுதியில் தங்கி வேலை செய்வார்கள் என மறுமலர்ச்சிக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மு)

### ஒன்றரை வருட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டச்சேர்ந்த தந்யையும், மகனும் வாளால் வெட்டியதால் சீவரட்ணம் என்பவர் கழுத்திலும், மகேந்திரரட்ணம் என்பவர் காலிலும் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

இவ்வெட்டுச்சம்பவம் பற்றி மகேந்திரரட்ணம் கூறுகையில் தாம் அண்மைக் காலமாக மூக்குக் கண்ணாடி அணிவதாகவும் அத்துடன் சிறு தாடி வைத்துக் கொண்டதும் அயல் வீட்டாருக்கு மன எரிச்சலை உண்டுபண்ணியதால் தம்மை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் இதனை தமது தமையனிடம் கூறிய போது தமையனான சீவரட்ணம் நியாயம் கேட்க அயல் வீட்டை நோக்கி சென்றதாகவும் அவ் வேளை அயல் வீட்டுத்தந்தையும், மகனும் திட்டமிட்டு வாளால் தமது அண்ணையை வெட்டியதாகவும் அவரை காப்பாற்ற சென்ற தானும் வாள் வெட்டுக்கிரையானதாகவும் மகேந்திரரட்ணம் தெரிவித்தார்.(அ)

## தங்கத்துடன்கைது

கொழும்பு கோட்டையில் ரூபா 78,000 பெறுமதியான மூன்று தங்கக் கட்டிகளையும் ஐந்து தங்க நாணயங்களையும் வைத்திருந்த ஒருவரை நேற்று முன்தினம் பொலிசார் கைது செய்தனர்.

விசாரணையின் பின் ரூபா 1,00,000 தண்டம் விதிக்கப் பட்டது